# இலட்சிய வீரரின் 'எரிமலை' வெடித்தது!


திராவிடநாடு

மலர் 9 | 3–12–50 | இதழ் 24

இலங்கை 15 சதம்] [விலை அணா 2


## நாரணமங்கலத்தில் 144 மீறினர்

## ஏழுவீரர்கள் ஏகினர் சிறைக்கு

### ஆளவந்தார் போக்கின் விளைவு

### மக்கள்மீது தடியடி தாண்டவம்

### தந்தை வெளியில்! தனயன் சிறையில்!

### தியாகத்தீயில் திருச்சி மாவட்டம்

பேச்சுரிமைப் போரின் இரண்டாவது கட்டம், திருச்சி மாவட்டம் நாரணமங்கலம் கிராமத்தில் 27—11—50 அன்று துவக்கப்பட்டது. கழகத் தோழர்கள் ஏழு பேர் — பேச்சுரிமை காத்து அறக்கோட்டம் புகுந்தனர்.

காங்கிரஸ் சர்க்கார் மக்களுரிமையைப் பறிக்கும் வகையில் 144 போடுவதை எதிர்த்து பேச்சுரிமைக்காக அறப்போர் தொடுத்துவிட்டோம் என சிவகெங்கை மாநாட்டில் பொதுச்செயலாளர் பிரகடனம் செய்தார்.

அதன் விளைவாக நமது அறப்போர் 'குன்றத்தூரில்' துவங்கியது. அங்கு நமது வீரர்களை வாட்டி வதைத்தது, சர்க்கார். மக்களை சின்னாபின்னப் படுத்திற்று. எட்டு முறை சுட்டது. மூவரை வீழ்த்திற்று. பலரை படுகாயப்படுத்திற்று. 48 மணி நேரம் ஊரில் யாரும் நடமாடக் கூடாதென, 'தர்பார்' செய்தது. நமது தோழர்கள் 27 பேர் மீது வழக்கும் தொடர்ந்திருக்கிறது.

எனினும், "எதையுந் தாங்கும் இதயம் கொண்ட" நமது, அறப்போரின் இரண்டாவது அங்கம் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்றிருக்கிறது. அங்கும் மக்களை 'அகிம்சா சர்க்கார்' தடிகொண்டு தாக்கியிருக்கிறது.

நாரணமங்கலம் — நமது பழம் பெருமையை நிலைநாட்டுகிறது. "போருக்குச் செல்லும் மகனை, மார்பிலே வேல் தாங்கி வா" என வீரத் தாய் அனுப்புவாராம்! அந்தக் காட்சியை அங்கே கண்டோம்!!

நியாயத்துக்குப் போராடும் தமிழ் மரபு என்பதை நாரணமங்கலத்து நமது தோழர் ஆதிமூலம் காட்டிவிட்டார். அங்கு 144 போடுமாறு அதிகாரிகளைத் தூண்டியது அவரது தந்தையாம்! எனினும் தனயன் தயங்கவில்லை!! தந்தை வெளியில் — தனயன் சிறையில்!!

நாரணமங்கலம் கிராமத்தில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக் கூட்டம் நடைபெறுவதாக சுமார் 15 நாட்களுக்கு முன்பே விளம்பரத்தாள்கள்மூலம் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. திடீரென அவ்வூர் பிரபல காங்கிரஸ்காரர்கள் முயற்சியாலும் தூண்டுதலின் பேராலும் இராமசாமி மூப்பனார் என்பவரால் 144க்கு மனு போட்டு, பெரம்பலூர் தாலுகா சப்-மாஜிஸ்டிரேட் அவர்களால் 27-11-50 காலை 8-மணிக்கு அவ்வூர் தி. மு. க. செயலாளர் உட்பட 10 தோழர்களுக்கு 15 நாளைக்கு 144 தடை உத்திரவு கொடுக்கப்பட்டது. தி-மு-க-வின் செயற்குழு தீர்மானப்படி தடையை மீறுவதென முடிவு செய்து திருச்சி மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் வானமாமலை தலைமையில் மீறுவதென்று முடிவு செய்ததன்பேரில் தோழர் வானமாமலை, ஜி. பராங்குசம் மற்றும் பலரும் நாரணமங்கலம் சென்றார்கள். அங்கு பகல் 3 மணியிலிருந்தே 144 தடையை மீறப்போகும்செய்தி அறிந்து, வெளியூர்களிலிருந்து முக்கியமாக, இருகூர், வரகுபாடி, விஜயகோபால்புரம், காரை, பெரம்பலூர், சிறுவாச்சூர், மருதடி, செட்டிகுளம் நாட்டார்மங்கலம், திருவளக்குறிச்சி, பில்லாளி, கூத்தூர், மூங்கில்பாடி, லப்பைக்குடிக்காடு மற்றும் பல ஊர்களிலிருந்தும் பலஆயிரக்கணக்கான மக்கள் பெரம்பலூர் தாலுக்காவிலே கண்டிராத அளவுக்கு கூடியிருந்தார்கள்.

போலீஸ் பந்தோபஸ்து பலத்த அளவிலே இருந்தது. மாஜிஸ்டிரேட் அவர்களும் ஸ்தலத்துக்கு வந்திருந்தார். 4 மணியிலிருந்தே ஊருக்குள் வந்துகொண்டிருந்த இயக்கத் தோழர்களையும், பொதுமக்களையும் ஊருக்குள் நுழையாமல் தடை செய்துகொண்டே இருந்தார்கள். அப்படி இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும், நடக்கப்போகும் நிகழ்ச்சியைக்காண தெரு ஓரங்களிலிருந்து கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள். சரியாக 6-மணிக்கு கூட்டம் நடக்கும் இடமாகிய ரேடியோ மைதானத்திற்கு நாரணமங்கலம் தி-மு-க- செயலாளர் தோழர் ஜெண்பகராஜன், திருச்சி மாவட்டக் கழக உறுப்பினர் தோழர் து. வானமாமலை, நாரணமங்கலம் தி-மு-க- பொருளாளர் தோழர் வி. எம். விஜயகோபாலன், ஷை தி.மு.க. விளம்பர உறுப்பினர்: ஆர். ஆதிமூலம் (144 வாங்கிய இராமசாமி மூப்பனார் மகன்) ஆகிய நால்வரும் மேடைக்குச்சென்றனர். சென்றதும் தோழர் ஜெண்பராஜன் தலைவரைத் தேர்ந்தெடுக்கப் பேசியதும் பெரம்பலூர் சர்க்கில் இன்ஸ்பெக்டர் வந்து நீங்கள் தடையுத்தரவை மீறப்போகிறீர்கள் என்று கேட்டு 144 தடை உத்திரவைப்படித்துக் காட்டினார். தோழர்கள் அனைவரும் "அது எங்களுக்குத் தெரியும் பேச்சுரிமையை நிலைநாட்ட நாங்கள் தடையை மீறத்தான் போகிறோம்" என்றார்கள். உடனே நால்வரையும் கைது செய்திருப்பதாகச் சொல்லி அழைத்துச் சென்றார். உடனே மூங்கில்பட்டி தோழர்கள் எம். வடிவேலு, ஜெண்பகராசபுரம் மருதமுத்து மேடைக்கு வந்து பேச ஆரம்பித்தார்கள். அவர்களையும் உடனே கைது செய்துவிட்டு இன்னும் யாராவது இருக்கிறீர்களா என்று தெருவில் இருமருங்கிலும் இருக்கிறீர்களா என்று கேட்டனர். மக்கள், 'இருக்கிறோம்' என்று ஆரவாரித்தனர்.

கூட்டத்தின் மத்தியிலிருந்த லெப்பைக்குடிக்காடு தோழர் அமராவதி (முஸ்லீம் தோழர்) நான் வருகிறேன் என்று சொல்லி வந்தார். உடனே அவரையும் கைது செய்தார்கள். உடனே மக்கள், "திராவிடநாடு திராவிடருக்கே" அடக்குமுறை ஒழிக, பேச்சுரிமையை தடைசெய்யாதே என்று விண்ணதிர முழக்கம் செய்தனர். இதைக்கண்ட போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தார்கள். உள்ளூர் கழக முக்கியஸ்தர்களும், வெளியூர் கழக தோழர்களும் ஜி. பராங்குசம் அவர்களும் கூட்டத்தை அமைதியாக கலைந்து போகுமாறு வேண்டிக்கொள்ளவே சிறிது சிறிதாக மக்கள் கலைந்து சென்றார்கள். இருந்தாலும் கூட்டம் கலைந்து செல்ல சுமார் 8-மணி ஆயிற்று. கைது செய்யப்பட்ட தோழர்கள் எழுபேரையும் பாடாலூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு இரவு 7-30 மணிக்கு காரில் அழைத்துச் சென்றார்கள். போலீசார் ஸ்தலத்தில் இரவு 8 மணி வரைக்கும் இருந்து சென்றார்கள். நாரணமங்கலத் தோழர்களும், மற்றும் பல கிராமத் தோழர்களும் ஒருநாள் விட்டு ஒருநாள் தடையை மீறிப்போக அனுமதி தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். பொதுச் செயலாளரைக் கலந்து பின் ஏற்பாடு செய்யலாமென்று தோழர் பராங்குசம் சொல்லி எல்லோரையும் அனுப்பிவிட்டு, இரவு வந்து பாடாலூர் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கும் தோழர்களைப் பார்த்து பேசிவிட்டு சுமார் 10 மணிக்குதிருச்சிவந்துசேர்ந்தார்கள். இந்த தடையுத்தரவைப் பற்றியும், அதற்கு காரணமாயிருந்தவர்களைப் பற்றியும், அரசாங்கத்தின் அடக்குமுறையைப் பற்றியும் கேவலமாகவும், அதிருப்தியாகவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த சம்பவம் பெரம்பலூர் வட்டத்திலேயே பெரிய பரபரப்பைக் கொடுத்திருக்கிறது.

மேற்கொண்டு நடக்க வேண்டியவைகளைக் கவனிக்க 28—11—50 காலை திருச்சியிலிருந்து தோழர்கள் சாம்பசிவம், அம்பில் தருமலிங்கம் ஆகியோர் பெரம்பலூர் சென்றார்கள்.

போலீஸ் அதிகாரிகளில் ஒரு பார்ப்பன சப்-இன்ஸ்பெக்டர் மாத்திரம் ஆபாசமாகத் திட்டி, கூட்டத்தைக் கலைக்கும்போது, அருவருக்கத்தக்க முறையில் நடந்துகொண்டார்.

#### மறுநாள்

28-11-50 காலையில் திருச்சிக்கு செய்தி எட்டியதும் தோழர் என். சாம்பு, மத்திய செயற்குழு உறுப்பினர் தோழர் அம்பில் தர்மலிங்கம் ஆகியோர், பெரம்பலூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு பாடாலூர் போலீஸ் ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்த கழக வீரர்கள் எழுவரையும் பெரம்பலூருக்கு கொண்டுசெல்வதற்காக பஸ்ஸுக்கு அழைத்து வரப்பட்டார்கள்.

பேச்சுரிமைப் போர் வீரர்கள் அனைவரும் முகமலர்ச்சியோடும் அகமகிழ்ச்சியோடும் 'சிறைச்சாலை என்ன செய்யும்' என்று எக்காளம்

(8-ம் பக்கம் பார்க்க)

#### சென்னையில் சிறைசென்ற தோழர்களுக்கு பாராட்டு

6-12-50 புதன் மாலை 6மணிக்கு கோகலேமண்டபத்தில் அண்மையில் சிறை சென்று மீண்ட தோழர்களுக்கு பாராட்டுவிழா நடைபெறும்.

தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், மு. கருணாநிதி, என். வி. நடராசன் சிறை சென்றோரைப் பாராட்டிப் பேசுவர்.

சிறை சென்ற தோழர்கள் வருகை தந்தருளும்படி வேண்டுகிறேன்.

கே. கோவிந்தசாமி,
செயலாளர்.
செ- மா- தி- மு- கழகம்.

## பொதுச் செயலாளர்மீது "ஜப்தி வாரண்ட்"!

### 'சுயராஜ்ய' சர்க்கார் நடவடிக்கை!

'ஆரியமாயை' வழக்குத் தீர்ப்பையொட்டி, தி. மு. க. பொதுச் செயலாளர் சி. என். ஏ. வையும், பெரியாரையும் சிறையிலே தள்ளி, பிறகு தண்டனையை 'ரத்து' செய்து விட்டதாக, அறிவித்த காங்கிரஸ் சர்க்கார், அவர்கள்மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையான ரூ. 700 ஐயும் வசூலிக்க மும்முரமான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது.

'ரூபாய் 700 அபராதம் கட்டத்தவறினால் ஆறு மாதம் சிறை வாசம்' என்பதே, தீர்ப்பு. அபராதம் கட்ட முடியாதென்று மறுத்தே, இருவரும், சிறைக்குச் சென்றனர்.

பொதுச் செயலாளர் மேற்படி அபராதத் தொகையை கட்ட மறுத்துவிட்ட காரணத்தால், அவருக்குச் சொந்தமான பொருள்களை "ஜப்தி" செய்யுமாறு, சுயராஜ்ய சர்க்கார், "வாரண்ட்" பிறப்பித்திருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகள் முயற்சித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

# 'டில்லி'யே நம் எதிரி; 'சென்னை'யல்ல!

## 'ஆக்ரா' அமளி—நமது அமைதி

### சங்கடப்படும் சர்க்கார்

### கருத்துள்ளோருக்கு காணிக்கை

கருப்புக்கோடி பிடித்தனர்!—'மந்திரி'யாரே திரும்பிப் போம்' என்று ஆரவாரம் செய்தனர்! மந்திரியார் பேசவிருந்த கூட்டம் நடைபெறவில்லை. கலவரம் ஏற்பட்டது. பலர் காயமடைந்தனர். மந்திரியார் அமர்ந்திருந்த மேடை 'அமர்க்களமேடை'யாயிற்று. விளைவாக 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் 'சென்னையிலே' நடைபெற்றதல்ல! கருப்புக் கொடி காட்டி, கைதானவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவருமல்ல!

நிகழ்ச்சி ஐக்கிய மாகாணத்தில் ஆக்ரா என்ற இடத்தில் கடந்த 24—11—50 அன்று நடைபெற்றதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம், டில்லி மந்திரிகளுக்கு மட்டுமே கருப்புக் கொடி காட்டுகிறோம்—டில்லி ஆதிபத்தியம் கூடாது, என்பதை உணர்த்துதற்காக.

டில்லி ஆதிபத்தியம் நம் நாட்டை ஆட்டிப் படைப்பது மட்டுமல்லாமல் நமது மாகாண மந்திரிகளை (சர்க்காரை) 'காவடி தூக்கிகளாக, நடத்தி வருகிறது.

இந்த அவமானத்தை, வெளியே சொன்னால் வெட்கக் கேடு என்று, திரைபோட்டு வருகிறார்கள், நமது மந்திரிமார்கள். இருந்தாலும் சில வேளைகளில் அவர்களையும் மீறி சில உண்மைகள் வெளிவந்து கொண்டுள்ளன.

நாம், கருப்புக் கொடி பிடிப்பது நமது நாட்டை 'சுடுகாடு' ஆக்கும் டில்லி எதேச்சாதிகாரத்துக்கு நமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத்தான். நமது மாகாணத்தை, நாயினும் கேடாய் மதிப்பதை, எதிர்த்து நமது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காகத்தான்.

X x X

'கோயில்பட்டி'யில் நாம் மேற்படி தீர்மானம் செய்த பிறகு, இருடில்லி மந்திரிகளுக்கு கருப்புக்கொடி காட்டினோம். திவாகர் வந்தபோது நமது கண்ணியமும் சக்தியும் நாட்டுக்குத் தெரிந்தது! ஆச்சாரியார் வந்தபோது சர்க்காரின் காட்டு மிராண்டித்தனமும், நமது தியாக உள்ளமும் நாட்டவருக்குத் தெரிந்தது!

பிறகு இரு டில்லி மந்திரிகள்—காட்ஜில், மஹ்தாப்—நம் நாட்டுக்கு வருவதாக அறிக்கைகள் தந்தனர். ஆனால், கடைசி நேரத்தில் 'பல முக்கிய அலுவல்'களால், இங்கு வராமல் தங்கள் விஜயத்தை ரத்து செய்தனர்! இந்த நிகழ்ச்சிகள் டில்லி மந்திரிகளுக்கு, கருப்புக்கொடி நிகழ்ச்சி விளைவித்திருக்கும் கலக்கத்தை நாட்டிற்கு காட்டிற்று!

நாம் கருப்புக்கொடி காட்டிய இரு தடவைகளிலும் நமது பெருமை, விரிந்த வானமாயிற்று திவாகர் வந்தபோது அமைதியோடு நாமிருந்தோம் — ஆளவந்தாரும் நடந்து கொண்டனர்.

ஆச்சாரியார் விஜயத்தின் போதும் நாம், அமைதியோடு தான் நடந்து கொண்டோம்—ஆனால் ஆளவந்தார் கூர்த்தவத் தாண்டவமாடினர்.

ஆளவந்தாரின் தர்பார் நடைபெற்றபோதும், நமது தோழர்கள், தடியடிகளைத் தாங்கிக்கொண்டனரே தவிர—சிறிது கூட தவறிய பாதையில் நடந்துகொள்ளவில்லை! இரத்தம் கொட்டியபோதும் கட்டுப்பாடோடிருந்தனரே தவிர, கலவரம் எதுவும் செய்யவில்லை!

ஆளவந்தாரின் 'அதிகார அம்புகள்' நமது முன்னணி வீரர்களை, தாய்மார்களை, வீதியில் உதைத்து, கீழே தள்ளி, திட்டி, இரத்தம் சிந்தச் செய்தபோதும் சிறிது 'ரசாபாசமும்' நடைபெறவில்லை!

காரணம், நமது திட்டம் வெற்றி புரிப் பயணம்—வீண் பாதை, அல்ல.

நாம், பலாத்கார வகைகளில் நம்பிக்கையற்றவர்கள்—பலகாலமாக, இதை வற்புறுத்தி வருகிறவர்கள்.

காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, அவர்கள் இடத்தில் அமரவேண்டும் என்ற ஆசை—நம்மிடம் கிடையாது. இங்கு உலவும் மந்திரிமார்கள் மீது, மக்கள் ஆத்திரத்தைக் கிளப்பி, அவர்களைப்பீடத்திலிருந்து தள்ளிவிட்டு, அவர்கள் இடத்தில் அமரும் ஆசை கொண்டோரல்ல, நாம்.

இந்த ஆசை நம்மிடமிருந்தால், இந்த மந்திரிகளை எதிர்த்துக் கீழே தள்ள நினைத்திருந்தால்,

மக்கள் மத்தியில் இவர்களை நடமாடாமல் செய்யும் ஆசை நமக்கிருந்தால்,

நாம் டில்லி மந்திரிகளுக்கல்ல; இந்த மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி பிடிக்க முடிவு செய்திருப்போம்.

ஆனால் நமது ஆசை — நமது நாட்டை, நமது நாட்டுக்குரிய எவர் வேண்டுமானாலும், பிறருக்கு கட்டுப்படாமல், நல்ல முறையில் ஆள வேண்டும் என்பதுதான். ஆகவே, தான் நாம் டில்லியை எதிர்க்கிறோம்!

இந்த அடிப்படையைக் கூட புரிந்து கொள்ளாமல், சிலர், அசடுகள் போலப் பேசுகின்றனர்.

X X X

ஆக்ராவில் ஐக்கிய மாகாண சுகாதார மந்திரியான சி. பி. குப்தா என்பவரை எதிர்த்து கருப்புக் கொடி காட்டியிருக்கின்றனர்.

ஐக்கிய மாகாணத்தில் ஒரு நகரம் ஆக்ரா. வந்தவர் ஐக்கிய மாகாண அமைச்சர். அவர் பேசவிருந்த மேடையை கற்களால் தாக்கியிருக்கின்றனர்.

மக்கள் கூட்டம், மாகாண அமைச்சர்மீது, இருமுறை பலாத்காரத்தோடு பாய்ந்திருக்கிறது.

குழப்பம், ஆவேசம், ஆத்திரம், பலாத்காரம் அத்தனையும் ஐக்கிய மாகாண அமைச்சர்மீது ஆக்ராவாசிகளால் காட்டப்பட்டிருக்கிறது—கருப்புக் கொடி காட்டியபோது.

ஆனால் இங்கோ?

அதுபோன்ற, அடாபிடிச் செயல்கள், எதுவும் இல்லை. நமது, மாகாண மந்திரிகள், நாள்தோறும் சுகமாக ஊர் சுற்றிக் கொண்டுதான் உள்ளனர்.

நம்மைப்பற்றி 'காலிகளும்' கூசும் வகையில் ஏசுவதும் பேசுவதும் 'ஈட்டி'களை வீசுவதுமாகவேயிருந்துங்கூட, இங்கு "ஆக்ரா" ஏற்படவில்லை.

சிறிதுகூட, நாம், நமது மாகாண மந்திரிகளுக்குச் சங்கடம் ஏற்படும் வழிவகைகளில் ஈடுபடவில்லை.

பிற மாகாணங்களைவிட, நம் மாகாணத்து மந்திரிகள் ஊதாரிகளாகயிருந்தும், உதவாக்கரைகளாக நிர்வாகம் நடத்தியும், டில்லிக்கு கட்டுப்பட்டு நம்மை திண்டாடவிட்டுங்கூட—இங்கு "ஆக்ரா" ஏற்படவில்லை!

"ஆக்ரா"வாசிகள் ஆத்திரத்தோடு தங்கள் மாகாண அமைச்சரை நடத்தியதற்குக் காரணம், அங்குள்ள காங்கிரஸ் ஆட்சி, தங்களுக்கான நல்ல ஏற்பாடுகளை செய்துதரவில்லையென்பதுதான்.

ஐக்கிய மாகாணத்தைவிட, சென்னை நிர்வாகம் சீர்குலைந்துதான் இருக்கிறது. மக்கள், மோசமாகத் திண்டாடித் தவிக்கத்தான் செய்கின்றனர். மக்கள் ஆத்திரத்தை நமது மந்திரிகள்மீது கிளப்புவதென்றால், 'ஆக்ரா'வைவிட இங்குள்ளோருக்குச் சுலபம்!

ஆனாலும், இங்கு அதுபோல அசம்பாவிதங்கள் ஏற்படவில்லை. நமது அமைச்சர்கள் 'நகர்ப் பவனி' நாள்தோறும் நடத்திக் கொண்டுதான் உள்ளனர்.

இங்கு அமைதி! கண்ணியம்!!

'ஆக்ரா'வில் பலாத்காரம்! ஆத்திரம்!!

இது ஏன்?

ஒரே பதில்தான் கூறமுடியும்.

இங்கு நாம்! நமது கழகம்!!

'ஆக்ரா'வில் நாமில்லை! நமது கழகம் இல்லை!!

ஐக்கிய மாகாணத்தை ஆள்வோரும் காங்கிரசார்தான்! இங்கே ஆட்சி புரிவோரும் அதே கட்சியினர்தான்! அங்கும் ஆட்சி ஒழுங்காக இல்லை; அதேபோல,—ஏன்? அதைவிட மோசமாகவே—சென்னை ஆட்சியும் இருக்கிறது!

ஐக்கிய மாகாணத்திலாவது, மக்களிடம் ஏற்பட்டிருக்கும் குறைகளை விரல்விட்டு எண்ணலாம். நமக்கு அரிசியும், சர்க்கரையும் அனுப்புமளவுக்காவது, திறமையுடன் இருக்கின்றனர், அங்குள்ள ஆட்சியினர்.

ஆனால், இங்கோ! மக்களிடையில் உலவும் குறைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. உயிர் நாடியான அரிசிக்கும், தேவையான சர்க்கரைக்கும் திண்டாடி—தெரு வீதியிலே அலைவதும், சாவதுமாக இருக்கின்றனர்.

இந்த கேடுகெட்ட சூழ்நிலையை, நாம் சூதுமதியினராக இருந்தால் வெகு சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். இந்த மந்திரிமார்கள் செல்லுமிடங்களிலெல்லாம் 'ஆக்ரா'வைக் காட்டிட முடியும்!

அரசியல் போட்டியில் ஈடுபடும் எந்தக் கட்சியும், இதுபோன்ற மோசமான சூழ்நிலையை, சும்மா விட்டுவிடாது. மக்கள் மனதில் புயலைக் கிளப்பி, மந்திரிமார்களை பதவியினின்றும் விரண்டோடச் செய்துவிடும். புது சர்க்காரை அமைத்து, தனது பிரதிநிதிகள் ஆள, முயலும்.

ஆனால் நாமோ — வழக்கம்போல அமைதியைத் தான் போதிக்கிறோம். இந்த மந்திரிகள் அல்லாடும் போதெல்லாம், ஊன்றுகோல் போல, உதவுகிறோம்.

பிற மாகாணச் சர்க்கார்களுக்காவது — தொல்லைகள் கொஞ்சம். அவர்களுக்குள்ள எதிர்ப்புகள் கொஞ்சம்.

ஆனால், இங்குள்ள மந்திரிகளைப் பதவியிலிருந்து துரத்த, கழுகுப் பார்வையோடு—பலர், காத்துக் கிடக்கின்றனர்.

தேசியப் போர்வையில் வெளிவரும் 'இந்து' 'மித்திரன்' போன்ற 'பத்திரிகை ஆதிபத்தியக் கும்பல்', இந்த மந்திரிமார்களின் வீழ்ச்சிக் காலத்தை கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றன.

மதப்போர்வையில் ஜாதீய வெறியோடு உலவும் 'வகுப்புத் துவேஷி'கள், தமது இனத்தைச் சேர்ந்த பெரிய அதிகாரிகள் மூலம், இந்த மந்திரிமார்களை 'அவமானக் குழி'யில் தள்ள, மறைமுகமாக வேலை செய்து கொண்டே இருக்கின்றனர்.

இங்குள்ள மந்திரிமார்களில் பலர் திராவிட இனத்தவராகயிருப்பதால், இங்கு செல்வாக்கோடு வாழ்ந்து இப்போது 'வடநாட்டு' தயவால் பெருமையோடு வாழும், சாணக்கியர்கள், 'சாண் சறுக்குமா முழம் சறுக்குமா?' என்று, தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

உள்ளுக்குள் ஏற்பட்ட மந்திரிப் பதவிச் சண்டையின் விளைவால், 'நீ அயோக்கியன்—அவன் பெரிய சுயநலம்' என்ற, தெருச்சண்டை, தினசரி வளர்ந்து இவர்கள் மானத்தை வானத்தில் பறக்கவிட்டுக் கொண்டிருக்கிறது.

'எப்போது சந்தர்ப்பம் வரும். இவர்கள் அடித்துக்கொள்வார்கள்-நாம், அந்த ஆசாமிகளை ஆட்டிப் படைத்து நமது நேரிய ஆட்சியை நடத்தலாம்!' என்று வளர்ந்து வரும் வடநாட்டுப் பாசிசம், புது அரசியலமைப்பு மூலம் ஏற்படுத்திக் கொண்ட அதிகார அம்பை வீச, சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு சங்கடத்தினிடையிலே பதவியில் கிடக்கும், இந்த மாகாண மந்திரிமார்களின் மீது—மக்கள் ஆத்திரத்தைத் திருப்புவதென்பது கடினமான காரியமல்ல! ஓயாத தொல்லைக்குள் தள்ளச் செய்வதும் முடியாத செயலல்ல!!

ஆயினும், நாம், அந்தப் பாதையில் செல்ல விரும்பவில்லை; காரணம், இந்த மந்திரிமார்களின் "பிடி", டில்லியிலிருப்பதும், டில்லிதொடர்பு அறுந்தால் ஒழிய, நல்லமுறையில் நம் நாடு வாழமுடியாது என்பதை நாம் அறிந்துமிருப்பதால்.

இருந்தும், இவர்கள் சண்டப் பிரசண்டம் செய்கிறார்கள்! நம்மீது பாய்கிறார்கள்! தங்கள் பதவிக்குள்ள 'அந்தஸ்தை'யும் காற்றில் பறக்க விடுகிறார்கள்!

உரிமைச் சூரியனை, சிறுகுடையால், மறைத்துவிட எண்ணுகிறார்கள்! பரிதாபம், பெருமழையோ புயல் காற்றோ ஏற்பட்டால், இவர்களது அதிகாரக்குடை என்ன கதியாகும்?

✻

# பகிரங்க விசாரணை வேண்டும்!

## குன்றத்தூர் மக்கள் கோரிக்கை

### முதலமைச்சருக்கு கடிதம்

குன்றத்தூரில் நடைபெற்ற கோரச் சம்பவம் குறித்து மேற்படி ஊர் கிராமப் பொதுமக்கள், கையெழுத்திட்டு கீழ்க்கண்ட கோரிக்கையொன்றை சென்னை மாகாண முதல் அமைச்சர் குமாரசாமி ராஜாவுக்கு 13—11—50ல் அனுப்பியுள்ளனர். மேற்படி மகஜரைப்பெற்றுக் கொண்டதற்கு' முதலமைச்சர் சார்பில் பதிலும் கிடைத்திருக்கிறது. எனினும், இதுவரை, மேற்படி சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகள் .எதுவும் ஆட்சியாளரால மேற்கொள்ளப் பட்டதாகத்தெரியவில்லை.

மாகாணத்தின் பல பகுதிகளிலுமுள்ள நமது திராவிட முன்னேற்றக் கழகக் கிளைக் கழகங்களும், பொது விசாரணை நடத்தப்பட வேண்டுமென அரசியலாரைக் கோரி முன்னூற்றுக்கு மேற்பட்ட தந்திகளை அனுப்பியுள்ளன.

பல தனிப்பட்ட கழகங்களும், தொழிலாளர் சங்கங்களும், மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் குறித்து விசாரணை செய்ய வேண்டுமென, ஆளவந்தாருக்குத் தெரிவித்துக் கொண்டுள்ளன.

இக்கருத்தை பல பத்திரிகைகளும், வலியுறுத்தி யிருக்கின்றன. இருந்தும், இதுபற்றி 'கேளாக் காதினராகவே' அரசாங்கம் இருந்து வருகிறது.

கீழே, தடியடிக்கும் துப்பாக்கிக்கும் இலக்கான குன்றத்தூர் மக்கள் முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலைத் தந்துள்ளோம்:—

அன்புமிக்க ஐயா,

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பொதுக் கூட்டத்திற்கு, இவ்வூர் திரு. பாலகிருட்டினப் பிள்ளை அவர்கள் தூண்டுதலால் 144 தடையுத்திரவு பிறப்பித்ததின் காரணமாக, 26-10-50-ல் நிரபராதிகளான பொதுமக்கள், கோரமான தடியடியாலும், பயங்கரமான துப்பாக்கிப் பிரயோகத்தினாலும், ரிசர்வ் போலீசார் வீடுகளில் புகுந்துசெய்த அட்டூழியத்தினாலும், பெண்பிள்ளைகள் அடைந்த அவமானப் பேச்சாலும், ஆட்களைக் குறிப்புக் காட்டி தடிகொண்டு அடிக்கப்பட்ட அச்சத்தாலும், ஊரடங்கு சட்டத்தால் ஏழை மக்கள் அவமானமும் பட்டினியும் எதிர்பாராது ஏற்கவேண்டியதாயிற்று. இந்த மகா பயங்கரமான கோரச்செயல் 10 நிமிடத்தில் புயல்வேகத்தில் ரிசர்வு போலீசாரால் நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் அவமானமும் நூற்றுக்கணக்கான மக்கள் அவதியும், நூற்றுக்கணக்கான மக்கள் தடியடிபட்டும், 3 பேர் துப்பாக்கியினால் தாக்குண்டனர் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

குன்றத்தூர், விவசாயத்திற்கும், நெசவுத்தொழிலுக்கும் அடிப்படையானது. ஏழைமக்கள் ஒரு மாத காலமாக ரேஷனில் அரிசி கிடைக்காமலும், நெசவுக்கு நூல கிடைக்காமலும் பட்டினிச் சாவை எதிர் பார்க்கும் நிலைமையிலிருக்க, அரசாங்கம் 144 தடையும், தடியடியும், துப்பாக்கி குண்டும், ஊரடங்கு சட்டமும் பரிசாகத் தருவது நீதியா, நேர்மையா, நாகரீகமா என்பதை பணிவுடன் கேட்கிறோம்.

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் எந்தக் காலத்திலும் சிறு கலகமோ அமைதியின்மையோ ஏற்பட்டதில்லை. ஷை கழகத்தினரால் நடத்தப்பட்ட முதற் கூட்டம் இது ஒன்றுதான். இதற்கு தடையுத்திரவு பிறப்பித்திருக்கவேண்டிய அவசியமே இல்லை. மேலும், குன்றத்தூரில் ஒழுக்கமுள்ள செல்வவந்தர்களும், பிரபல துங்கி வியாபாரிகளும், மதிப்புள்ள நிலச்சுவான்தாரர்களும் பலர் உள்ளனர். அப்படியிருக்க, ஒரு தனிப்பட்ட, மக்கள் செல்வாக்கற்ற, திரு. பாலகிருஷ்ண பிள்ளையின் கோரிக்கைக்கிணங்கி, சர்க்கார் தடையுத்திரவு பிறப்பித்தது ஜனநாயகமாகாது. அதிகாரிகள் ஆர அமர யோசித்து, மேற்படி பிரமுகர்களைக் கண்டு இவ்வூருக்கும் தி மு. கழகத்திற்கும் 144 தடையுத்திரவு அவசியமா என்று கேட்டிருந்தால், இந்த கோரமானதும் அபாயகரமானதுமான சம்பவம் நிகழ்ந்திருக்காதென்பதை எடுத்துக் கூற ஆசைப்படுகிறோம்.

இச்சிற்றூருக்கு 48 மணி நேரம் ஊரடங்கு சட்டம் அமுல் நடந்தது பரிதாபத்துக்குரிய சம்பவமாகும். அதை வாயினால் சொல்ல மனம் கூசுகிறது. ரிசர்வு போலீசார் மனித வேட்டை ஆடினர் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் இந்த விபரீதமான சம்பவத்திற்குக் காரணமாயிருந்தவரையும், அதன் சம்பந்தமாய் தடையுத்திரவு விதித்த அதிகாரிகளையும், துப்பாக்கிப்பிரயோகத்திற்கு சம்பந்தமுள்ள அதிகாரிகளையும் பகிரங்க விசாரணை நடத்தி நீதி வழங்கவும், இச்சிற்றூருக்கு விதித்திருக்கும் தடையுத்திரவை நீக்கி, மக்கள் சுயேச்சையாக வாழ்க்கை நடத்த, அகிம்சையை அடிப்படையாகக்கொண்ட காருண்யமிக்க அரசாங்கம் ஆவனசெய்யுமாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

—✻—

## சொந்த மனைவி சோற்றுக்கழுகிறான்!

26-11-50 அன்று வடநாட்டிலிருந்து 528 அகதிகள், சென்னைக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் 183 பேருக்கு சென்னையில் சர்க்கார் பொறுப்பில் வேலை தேடித்தரப்படும், என்று பத்திரிகைகள் மூலம் செய்தி கிடைத்துள்ளது.

சென்னையில் வேலை தேடித்தரப்பட்டவர்கள் போக மிஞ்சிய 345 அகதிகளும் திருச்சிக்கு அனுப்பப்படுவாராம். அவர்களுக்கு தென்னிந்திய ரயில்வேயில் உத்தியோகங்கள் அளிக்கப்படுமாம்.

வடநாட்டிலிருந்து, அகதிகள் என்ற பெயரால் தென்னாட்டில் கொண்டுவந்து குடியேற்றப் படுகின்றனர். அவர்களுக்கு, வந்ததும், பதவிகள் தந்தும், பராமரித்தும் வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் செலவிலேயே செய்து தரப்படுகின்றன.

தென்னாட்டில் மக்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தால் விம்மி மடிகிறார்கள்! படித்துப் பட்டம் பெற்றும் தங்களைக்காப்பாற்றிக் கொள்ள வழியின்றி பஞ்சைகளாய்த் திரிகிறார்கள்! கடல்கடந்து ஆபிரிகாவிலும், இலங்கைத் தோட்டத்திலும், மலேயாக் காடுகளிலும், எங்கெங்கு வயிற்றுப் பிழைப்புக்கு வழிகிடைக்குமோ அங்கெல்லாம் சென்று அலைகிறார்கள்! தூக்குமேடைக்கும், வெறியர்களின் துப்பாக்கிக்கும் இரையாகிச் சாகிறார்கள்!

அவர்களைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாத அரசாங்கம் 'அகதிகளை' கொண்டு வந்து குடியேற்றுகிறது. இன்பத்திராவிடத்தைவிட்டு மனைவி கதற, மக்கள் துடிக்க பரதேசிகளாய் ஓடும் பரிதாபத்தைக் கண்டு கொண்டிருக்கும் அரசாங்கம் 'பதவிகள்' தருகிறது, வடநாட்டு மக்களுக்கு!

தமிழன் — பிச்சையெடுக்கிறான்! தமிழ்க் குடும்பம் வீதியிலே புரள்கிறது! தமிழ்த்தாய்க் கண்ணீர் வடிக்கிறாள்! அதுகண்டு சகித்துக்கிடக்கும் அரசாங்கம் அகதிகளுக்கு 'பணச் செலவு' செய்கிறது.

சொந்த மனைவி சோற்றுக்கழுகிறாள், சொகுசு 'நாயகி'க்கு விருந்து, வைக்கின்றனர்!

திராவிடத்தில் வேலையில்லாது' மக்கள் திண்டாடுகிறார்கள், தெருவீதியிலே அலைகிறார்கள், துடித்துத் தூக்குமரத்தைத் தேடிச் செல்கிறார்கள்.

அவர்கள் கண்ணீருக்கு விமோசனம் செய்யப்படவில்லை. வெளிப்பிரதேசத்திலிருந்து புது ஆட்களை இறக்குமதி செய்து 'வேலைகளும் பதவிகளும்' தருகிறார்கள்.

நீதியா இது? அடுக்குமா, நாம் வெந்து சாகையில் வெளியாருக்கு விருந்தா? பொதுமக்களே, சிந்தனை, இந்த ஆட்சியின் போக்கு! சிந்தித்துப் பாருங்கள்! சிந்தித்துப் பாருங்கள்!!

சொகுசு நாயகிக்கு விருந்து வைபவம்!!

## ஒரு சேதி!

"ஒரு சேதி அண்ணா?"

"என்ன தம்பி?"

"சென்னையிலே இந்து மகாசபை மகாநாடு நடந்ததாமே!"

"ஆமாம், தம்பி"

"பத்திரிகைகளைப் பார்த்தீர்களோ"

"பார்த்தேன்."

"எவ்வளவு பிரமாதமாக, புகைப் படங்களுடன் வெளியிட்டிருந்தன!"

"ஒன்றும் ஆச்சரியம் இல்லையே தம்பி"

"நமது மகாநாட்டைப்பற்றி நாலு வரி கூட போடாத பத்திரிகைகள்"

"பத்திரிகைகள் 'அவர்கள்' கூட்டத்தாருடையது, தம்பி. காங்கிரஸ் பத்திரிகைகள் என்று கூறிக்கொண்டாலும், அவைகளின் நோக்கம் எல்லாம் தங்கள் சுரண்டலுக்கு ஆதரவான இந்து மதத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் தம்பி!"

"சரி! அண்ணா, காந்தியாரை இந்து மதம்தானே கொன்றது?"

"உஸ்...போய்ட்டு வா, தம்பி!"

## ஆளவந்தாரும் ஆசிரியரும்!

ஆட்சி பீடத்திலுள்ள மந்திரிமார்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், பிரமுகர்களும், ஜில்லா போர்டு, முனிசிபாலிடி, பஞ்சாயத் போர்டுகளிலுள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மெம்பர்களும் ஆசிரியர்கள் கூட்டங்களிலோ, மகாநாடுகளிலோ கலந்துகொள்ளவாய்ப்பு ஏற்படும்பொழுது, தங்கள் எதிர்க்கட்சிக்காரர்களைப் பற்றி குறைகூறுவதும், ஆசிரியர்களை எதிர்க்கட்சிக்காரர்களை எதிர்க்கும்படி தூண்டுவதுமான பிரசார வேலையில் ஈடுபடுகின்றனர். ஆனால், ஆசிரியர்கள் அத்தகைய அறிவிலிகளுமல்ல, அடிமைகளுமல்ல. அவர்களுக்கும் தன்மான உணர்ச்சி உண்டு. அவர்களும் நன்கு உணர்வார்கள் நாட்டில் நடமாடும் கட்சிகளைப் பற்றியும், கட்சிக்காரர்களைப் பற்றியும். ஆசிரியர்கள் கூட்டங்களில் பேச வேண்டியதெல்லாம் ஆசிரியர்களின் சம்பள உயர்வு, அவர்கள் ஆரம்பக் கல்விக்காக உழைக்க வேண்டிய வழி வகைகள், அரசாங்கத்தார் கொண்டுவந்துள்ள கல்விச் சம்பந்தமான சீர்திருத்தங்கள், இவைகளைப்பற்றி ஏதாவது தெரிந்தால்பேசவேண்டுமேயல்லாது ஆசிரியர் சங்கங்களை குறிப்பிட்ட கட்சியின் பிரசார மேடையாக பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. ஆசிரியர்களையும் குறிப்பிட்ட கட்சிக்கு தேர்தல் பிரசார இயந்திரமாக பயன்படுத்த முனைவதும் கூடாது. ஓர் குறிப்பிட்ட ஆசிரியர், குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாளர் என்ற காரணத்தினாலேயே அவரை வேலையிலிருந்து நீக்கவோ, அவரை வேலையை விட்டு நீக்குமளவுக்கு தொல்லையோ ஆட்சியாளர்கள் கொடுக்கவும் கூடாது. ஆதலின் ஆசிரியர்களை அனாவசியமாக அரசியல் கிளர்ச்சிகளில் ஆட்சியாளர்கள் தூண்டி தொல்லை படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம். [ "ஆரம்பக்கல்வி" ]

## "வனப் பிரியர்"-கள்!

"வனப் பிரியர் சங்கம்"—ஒன்று, புது டெல்லியில் அமைக்கப்படப் போகிறதாம். அதன் ஆதரவாளர் ராஜேந்திரப்பிரசாதாம். சங்கத்தின் தலைவராக 'மா மகோற்சவ மகாத்மா' உணவு மந்திரி கே. எம். முன்ஷி இருப்பாராம். இந்தச்சங்கத்தைப் பரிபாலனம் செய்ய ஒரு மத்திய போர்டு நியமிக்கப்படுமாம்—ஆளவந்தாரால். இந்த "வனப்பிரியர்"கள் கும்பலில் சேரவேண்டுமென்றால், காசு பணம் தரவேண்டுமாம்! 100 மரங்களை (செடிகளை அல்ல!) நட்டுவிட்டால், அவர்களுக்கு 'வனப்பிரியர்' ஆக அருகதை புண்டாம்!


### நல்ல புத்தகங்கள்

| | |
|---|---|
| சோன் நீட்டிய வஞ்சகி | 0—8—0 |
| மூர்த்தி நீட்டிய கன்னியா? விதவையா? | 0—8—0 |
| கமலினி | 0—4—0 |
| வாணிதாசன் கவிதைகள் | 0—4—0 |

கழிவு 25%-செலவு இனாம்

சரோஜினி பதிப்பகம்
A. புதுச்சேரி.

திராவிட நாடு
ஞாயிறு] 3–12–50 [காஞ்சி

# எத்தனும் பித்தனும்

★

'எனக்கிருப்பது இரண்டுகோடி ரொக்கம்- எடுத்துக்கொள்— இதோ இரும்புப் பெட்டிச்சாவி! மாடி வீடுகள் நான்கையும் உன் பேருக்கே எழுதி விடுகிறேன்- மாண்ட மனைவியின் மீதிருந்த தங்கநகைகள் இருக்கின்றன- அவைகளையும் நீயே எடுத்துக்கொள்! நன்செய் புன்செய் நிலங்கள் எத்தனையோ ஏகர்கள் உண்டு! எல்லாம் உனக்கு— அழகான தோப்புகள், தோட்டங்கள் ஏராளம்—அவைகளையும் உனக்கே சொந்தமாக்கிவிட்டேன் கார் உண்டு—அதிலே நீ சவாரி செய்! ஆனால் எனக்கொரு பெரும் உதவி செய்ய வேண்டும்—நான் நாலு வீடுகள் சென்று பிச்சையெடுத்து வருவேன் — அதனை வைத்து தின்ன இந்த திண்ணையிலே இடம் வேண்டும்- படுத்திருக்க அனுமதி வேண்டும்' என்றான் அவன் - கெஞ்சினான் - கூத்தாடினான் - அவன் ஒரு பித்தன்!

"எல்லாம்சரி — என்னிடம் இவை இருக்கட்டும் — கடைசியிலே கேட்டாயே, அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை- கொடு— ஆனால் கேட்காதே! நான் அனுபவிப்பேன் — நீ கொடுப்பதோடு நிறுத்திக்கொள். அதை எடு. இதை தா என்றுமட்டும் சொல்லாதே" என்றான் இன்னொருவன், கண்டிப்போடு- அவன் எத்தன்!

பித்தனும், எத்தனும் பேசிக்கொண்டால் நாம் சிரிப்போம் — அதுவே உண்மையாக இருந்தால் திகைப்புதானே தோன்றும்!

இந்தியாவிலே இது நித்தியநாடகமாகிவிட்டது! நாம் பார்க்கிறோம் — வெறுக்கிறோம்- இன்னும் சிலர் இதனையே ஆரவாரத்தோடு ரசிக்கின்றனர்-

பித்தனாவது பேசினான் — ஆனால் நம் மாகாண சர்க்கார் அவன் பேசியதையே செய்கிறார்கள்!

எல்லா உரிமைகளையும் 'டெல்லி'யிலே குவித்து முடிச்சிட்டுவிட்டுத் திரும்பினர்- எல்லா அதிகாரங்களையும் அந்த 'நவீன நவாப்புகளிடம்' கொடுத்துவிட்டு 'அடங்கியே கிடப்போம் — சொந்த உரிமைகள் எதுவும் எங்களுக்குத் தேவையில்லை!' என்று அடிமை முறிச்சீட்டில் கையொப்பமிட்டுவிட்டனர்- வியாபாரம் அவர்கள் விருப்பப்படி, நீதி அவர்கள் கூறுகிறபடி, திட்டம், அவர்கள் எண்ணம்போல என்று விட்டுக் கொடுத்துவிட்டனர்- சட்டம் அவர்களிடம், தட்டிக்கேட்கும் அதிகாரம் அவர்களிடம்! எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு கெஞ்சிக் கேட்டுப் பெறுவதிலே பெருமையடைகிறார்கள்.

இந்திய புதிய அரசியல் திட்டத்தினால் மாகாணங்களை 'மரக்கட்டைகளாக' ஆக்கிவிட்டார்கள்- ஆகவே, அவர்கள் நிலை 'பவதிபிட்சாந்தேகி' ஆகிவிட்டது! எனினும் அதுபற்றிய வெட்கம் துளியுமின்றி, வேதனை அணுவளவுமின்றி 'மந்திரி நாற்காலியே' சதம் என எண்ணி, மக்களை மதியாது திரிகிறார்கள், இந்த நாட்டாட்சியாளர்கள்!

பித்தன் பேசினான்—செய்யமுடியாது- எனெனில் அத்தகைய சொத்துக்கள் இல்லை, உண்மையில்! ஆனால் இந்நாட்டாட்சியின்கீழ் வளமார் திராவிடமே சிக்கிக்கிடக்கிறது- அதனை வடநாட்டு எத்தனிடம் கொடுத்துவிட்டு, ஓட்டுத் திண்ணையில் உட்கார இடங்கேட்கிறார்கள்!

எத்தனோ, பித்தன் கேட்ட சிறு உதவியையும் கொடேன் என்றான்- வேடிக்கைக்காக! ஆனால் இந்திய மத்தியஆட்சி உண்மையிலேயே கூறுகிறது, கொஞ்சமும் பயமில்லாமல்!

ஒரே இந்தியா என்றனர்—அகில பாரத் என்று பேசினர்- அதற்கு அதிகார இதயம் டெல்லி என்றனர்- ஆகவே அங்கே அதிகாரங்கள் — வரிகள்—செல்வாக்கு, சீர், சிறப்பு, பெருமை, புகழ் எல்லாம் வேண்டும் என்றனர்- எல்லாம் கிடைத்தது, எதிர்பார்த்ததற்கும் மேல், அவர்களே வியப்படைந்து மூர்ச்சையடையுமளவிற்கு!

சென்றவாரம் பிரதமர் நேரு இந்திய சட்டசபையில் பேசிய பேச்சைப் படித்தவர்களுக்கு இந்த 'பித்தன் எத்தன்' கூத்துதான் நினைவிற்கு வரும்-

மாகாண சர்க்கார்கள், மிகவும் அதிகமாக மத்திய சர்க்காரை நம்பிக் கிடக்கின்றன- இது கூடாது, ஆகாது என்ற 'பாணியிலே' பேசியுள்ளார்- எல்லாவற்றையும் என்னிடமே கொடு எதையும் கேட்காதே என்றஎத்தனை விட அதிகமாகவே பேசியுள்ளார் நேரு-

மாகாணங்கள் இன்று வெறும் மண்பொம்மைகள் — அதிகாரங்கள் உறிஞ்சப்பட்டுவிட்டன- உரிமைகள் வற்றிவிட்டன- சுயாட்சி செத்துவிட்டது- தானே செய்யும் பண்பும், பழக்கமும் பட்டுவிட்டன- தனக்காக ஒன்றை, தானே முடிக்கும் ஆற்றல் தூங்கிவிட்டது-

மாகாணங்களுக்குப் பித்தன்நிலை கூடாது—மத்திய சர்க்காருக்கு எத்தன் என்ற பழி வேண்டாம் என்பதே நம் திட்டம்!

அதனால்தான் நாம் பிறந்த திராவிடத்தை, நமக்கே ஆக்கி, நம் ஆட்சியை அதில் நிலைநாட்டி, நானிலத்திலே உள்ள பலநாடுகளிலேஒன்றாக இலங்கவைக்கும்வரை உறங்குவதில்லை என்ற முடிவுடன் நம் இலட்சியபுரி பயணத்தை நடத்தி வருகிறோம்-

திராவிடநாடு பிரிந்தால்தான், இந்நாட்டவருக்கு துன்பம்தீரும், துயரம் போகும், இன்பம் மலரும்- இதனை எல்லோரும் உணர நாளாகும் — ஆனால் அதன் 'முன்னோசை'மட்டும் இப்பொழுது எங்கும் கேட்கிறோம்-

'நான் உமியைக் கொடுப்பேன் — நீ அதில் அவலைக் கொண்டுவந்து கொட்டவேண்டும்- பிறகு இரண்டு பேரும் ஊதி ஊதித் தின்போம்' என்று கூறிடும் குழந்தைக்கதையைப்போல இன்று மாகாண மத்திய சர்க்கார்களின் கூட்டுறவு இருக்கிறது-வேடிக்கையான இணைப்பு-விபரீதமான துண்டிப்பு ஒரு நாளைக்கு ஏற்படத்தான் போகிறது-

நெஞ்சிலே நடுக்கமின்றி, நேரு கூறுகிறார், மாகாண சர்க்கார், எதற்கும் மத்திய சர்க்காரின் உதவியைக் கோரக்கூடாது என்று! ஆனால் நோயாளி என்ன செய்வான்! நோயாளியாக்கிவிட்டு, டாக்டராகவும் இருந்துகொண்டு அடித்து விரட்டிடும் பரிதாபக்காட்சியாகத்தானிருக்கிறது, இந்தியப் பிரதமர் கூற்று!

நல்லவனைப் பித்தனுமாக்கிவிட்டு பிறகு அவன் சொத்துகளையும்பிடுங்கிக்கொண்டு துரத்திவிடுகிறான் எத்தன் என்றால் இது கேட்கவே பொறுக்கமுடியாத கோரந்தானே! அப்படித்தானுள்ளது- இன்றைய நிலை!

ஆம்! நாம் வகுத்திருக்கும் திராவிட நாட்டுப் பிரிவினை பாதையிலே அவர்கள் நடந்தால்தான் 'பித்தன்' நிலைமாறும்—'எத்தன்' தொல்லையும் சாயும்- இதனை இங்குள்ள 'சுயராஜ்ய வீரர்கள் எங்கே உணருகிறார்கள்!

✻

இருள் கிழித்துத் தமிழ் நாடாம் நிலவுதனை உலகின் எதிர்வைக்கும்—எழுச்சிக் கீதம்
மருள் போக்கி மக்களை மகிழ்விக்கும் புதுமணத் தென்றல்!

சிந்தனைச் 'சோலை'யின் சீரிய முயற்சி!
சிதைந்த வாழ்வின் சோகச் சித்திரம்!!
நேசவாளி பிச்சைக்காரன் ஆகும் கோரம்!
கம்யூனல் ஜி. ஓ. கூடாதென்று கூறும் விசித்திர வாதம்!
—புதிய கதை—புதுவாழ்வின் காவிய ஓவியம்!—

★ வேதனைக்குரல் ★

கதை வசனம் மு. கருணாநிதி

9–12–50 சனி இரவு
வாலாஜாபாத் ராஜா தியேட்டரில்

சிந்தனைப் புயல் வீரமணி! சிரித்திடும் சிலந்தி ரங்கனாதர்
எத்திப் பிழைக்கும் ஏகாம்பரம்! காதலில் தவிக்கும் முல்லை!

அத்தனைபேரும் காணவேண்டிய சித்திரங்கள்

புதுமலர்ச்சி நாடக மன்றத்தார்

டிக்கட் ரூ. 5, 3, 2, 1, வரியுள்பட

டிக்கட் கிடைக்குமிடங்கள்:-

'திராவிடநாடு, நிலையம், காஞ்சிபுரம்
ஜூபிடர், ஐஸ் கம்பெனி ,,
பச்சையப்பா—பெரியகாஞ்சிபுரம்
சி. பஞ்சாட்சரம்—மதுராந்தகம்
திருநாவுக்கரசு—குன்றத்தூர்
துரைசாமி திருக்கழுக்குன்றம்

நடிகர்கள்

மு. கருணாநிதி
புலவர் குழந்தையா
கவிஞர் கண்ணதாசன்
ஈழத்தடிகள்
தில்லை வில்லாளன்
சி.விஎம். அண்ணாமலை
கே. டி. எஸ். மணி
சே. கோ. பெருமாள்
வே. சம்பந்தம்
அரங்கண்ணல்
மற்றும் பலர்.

★

சென்னை

## சென்னை மாநில தி. மா. மு. கழக வரவேற்புக்குழு

மேற்படி வரவேற்புக்குழுக் கூட்டம் 6—12—50 புதன் மாலை, 5-மணிக்கு தங்கசாலை 202 எண் கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது மாநாட்டின் வரவு செலவு கணக்குகள் பற்றியும் சென்னையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால ஆக்க வேலைகள் குறித்தும் யோசிக்கப்படும். உறுப்பினர்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

கே. ஏ. மதியழகன்

---

தோழர் **நெடுஞ்செழியன்**

கீழ்க்கண்ட ஊர்களில் நடைபெறும் தி-மு-க- பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வார்.

15—12—50 கண்டவராயன் பட்டி (தேவகோட்டை)

16—12—50 சோக்கநாதபுரம் (மானாமதுரை)

---

## திருவாரூரில்!

**10-12-50-ல்**

தி. மு. க. ஆண்டு விழாவில்

தோழர்கள்

**மு. கருணாநிதி**
**கண்ணதாசன்**
**அரங்கண்ணல்**
**என். எஸ். இளங்கோ**
**ப. உ. சண்முகம்**
**கே. ஆர். செல்லமுத்து**

கலந்துகொள்வார்.

# கசக்கும் சர்க்கரை—'கரியாக்கும்' சர்க்கார்

## பொதுமக்கள் பணம் பாழாகும் படலம்

### வடநாட்டாட்சி தரும் பரிசு

## 133 இலட்சம் நஷ்டம்

இந்திய சர்க்காருக்கு நஷ்டம்! — சர்க்கரை இறக்குமதியில் அதிகவிலை கொடுத்து வாங்கியதால் ஏற்பட்ட இழப்பு 133 இலட்சம்!

133 இலட்சம் கொஞ்சமல்ல, நெஞ்சுள்ளவர்கள், இந்த பெரு நஷ்டத்தை ஏற்கமாட்டார்கள். ஆனாலும், இந்திய சர்க்கார் இந்த நஷ்டத்தை தாங்கிக்கொண்டு, இன்னமும், 'சர்க்கார்' என்ற பெயரில் உலவுகிறது—வெட்கம்!

நமது சென்னை மந்திரிகள் எது வேண்டுமானாலும், டெல்லிக்குப் பறந்து செல்கிறார்கள். ஆனால் வரும்பொழுது வெறுங்கையுடனே காட்சி தருகின்றனர். அதுவும் இவர்கள் பொருள் உதவி என்று போன பொழுதெல்லாம், 'கைவிரிப்பை'யே நம் நாட்டு மக்களுக்கு டெல்லி காணிக்கையாக கொண்டுவந்துள்ளனர்.

ஐந்து இலட்சம், ஆறு இலட்சம் என்று கடன் கேட்ட பொழுதெல்லாம் 'பஞ்சப் பாட்டு' பாடிய 'டெல்லி' 133 இலட்சத்தை, தன்னுடைய திறமைக் குறைவிற்கு பலியிட்டுள்ளது!

சர்க்கரை தித்திக்கும்! ஆனால் இந்திய சர்க்கார் இன்று சர்க்கரையென்றாலே 'கசக்கும் நிலையுண்டாக்கி விட்டார்கள்.

'உணவு இலாகாவிலே ஊழல்கள் மலிந்துவிட்டன. அதனைத் திருத்தவே புறப்பட்டேன்' என்று கூறி வந்தார் முன்ஷி. 'என்னால் ஆகவில்லையே, என் செய்வேன் ஈசா' என்று 'முகாரி' பாடி விலகினார் ஜெயராம் தாஸ் தௌலத்ராம். வந்த முன்ஷியாரின் 'கைங்கரியத்தினால்' நாட்டு மக்களின் வரிப் பணம்—நூறு, இருநூறல்ல— நூற்றுமுப்பத்துமூன்று இலட்சங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

சட்டசபை விவாதத்தின்பொழுது இந்த உண்மையை தோழர் தியாகி அம்பலமாக்கியுள்ளார்.

சர்க்கரையிலே, ஏற்பட்ட இந்த பணச் சரிவை அவர் படிப்படியாக விளக்கியுள்ளார்.

இந்த ஆண்டு துவக்கத்திலே இந்திய சர்க்கார், வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை வரவழைப்பது என்று முடிவு செய்தனர். இந்திய சர்க்கார் இதற்குக் காட்டிய காரணங்கள் இரண்டு—'ஓரே. கல்! இரண்டு கனிகள்!' என்றனர். அதாவது, வெளிநாட்டிலிருந்து சர்க்கரை வருவதால், நாட்டில் பரவியுள்ள சர்க்கரைக் குறை தீரும். மேலும், சர்க்கரை பதுக்கி வைத்துள்ளோரின் கொட்டமடங்க, இதுதான் சரியான திட்டம் எனப் பேசினர்.

ஆனால், அதற்கு மேல் அவர்களின் போக்கைப் பாருங்கள்-ஆளும் அனுபவமில்லாதவர்களிடம் ஆட்சி சிக்கிவிட்டால் ஏற்படும் அலங்கோலத்தையும் பாருங்கள். அந்த காட்சியை கண்ட பிறகாவது கூறுங்கள், இந்த ஆட்சி இன்னமும் நீடிக்க வேண்டுமா என்று!

இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் ஹாங்காங்கைச் சேர்ந்த பிரபல ஏற்றுமதி, இறக்குமதி காரியங்களை நடத்தும் கே. எஸ். பார்மர் அண்ட் கம்பெனியின் பிரதிநிதிகள், அப்பொழுது உணவு மந்திரியாக இருந்த கனம் தௌலத்ராமுக்கு எழுதிக் கேட்டனர். தங்களால் டன் ரூ 652 ஆக, மே, ஜூன் திங்கள்களில் 30,000 டன் அனுப்ப முடியும் என்று உறுதி கூறினர். மந்திரியாரோ, இதுபற்றி 'மந்தமாக'வே இருந்துவிட்டார். ஏனோ தெரியவில்லை ஒருவேளை, 'பறந்து செல்லும்' நமக்கு ஏன் இந்த 'சர்க்கரைச் சனியன்' தொல்லையென்று இருந்துவிட்டாரோ என்னவோ! நேரில் வந்தவர்களையும், உணவு இலாகா துணைக் காரியதரிசி ஒருவரைக் காணும்படி அனுப்பிவிட்டார். அவரும் மந்திரி பதவியை விட்டு விலகினார். கடைசியாக, அந்த ஒப்பந்தத்தை ஏற்கவே இல்லை.

இந்திய சர்க்கரை உற்பத்தி செய்யும் முதலாளிகள் கையிலே சர்க்கார் சிக்கிக் கொண்டதால், அவர்கள் ஆட்டி வைத்தபடி ஆடினர். முதலாளிமார்களும், தங்கள் நிலையை வலுவாக்கிக்கொள்ள தக்க வழி தேடிக்கொண்டனர். வெளிநாட்டிலிருந்து சர்க்கரை வரவில்லை. உள்நாட்டு சர்க்கரை பதுக்கப்பட்டது. ஆகவே சர்க்கரை தேவை வளர்ந்து கொண்டே போயிற்று. எவ்வளவு அதிக விலையில் விற்க முடியுமோ, அப்படி சர்க்கரை விற்றனர்.

கொள்ளை இலாபம் பெற்றனர்.

முன்ஷி வந்தார்—தமது 'விசித்திர' திட்டத்தை, நாட்டு மக்களின் ஆச்சரியத்தையும், கேலிச் சிரிப்பையும் கண்டும் காணாதவராய், விடாப்பிடியாய் முடித்துவைத்தார். வனமகோற்சவம் நடத்துவதிலே அவர் காட்டிய அக்கரையை, சர்க்கரை விஷயத்திலே காட்டவில்லை. அது மட்டுமல்ல, சர்க்கரையைப் பற்றிய வரையில் அவர் வெளிநாட்டிலிருந்து சர்க்கரை வரவழைக்கப்படக்கூடாது என்று நம்பினார் – கூறினார்!

மீண்டும், அதே கம்பெனியார் 50,000 டன் தருவதாக முன்வந்தனர். இப்பொழுது டன் 122 டாலர், அதாவது அமெரிக்க டாலர் கையில் இல்லாவிட்டால் ரூ. 655 கொடுத்தால் போதும் என்றனர். மறுத்தனர் – கண்டிப்பாக முடியாதென்று விட்டனர்.

எண்ணிப் பார்த்திடில், இது நாட்டு மக்களுக்கு சர்க்கார் செய்த பயங்கரத் துரோகம் என்று கூறத் தோன்றும்.

ஆம், அவர்கள் அலட்சியத்தால், இன்று நம் பணம் 133 இலட்சம் அனாவசியமாக அதிகம் கொடுத்திட வேண்டி வந்துவிட்டது!

கொரிய போரால், உலக மார்க்கட்டிலே சர்க்கரை விலை ஏறிவிட்டது.

40,000 டன் சர்க்கரை வாங்கினர் – அதிக விலை கொடுத்து, அதுவும் அவர்களின் தயவு தாட்சண்யத்திற்கெல்லாம் இடம் கொடுத்து! இங்கு வந்து சேரவும், சேர்ப்பிக்கவும் ஏற்பட்ட தொல்லைகள், நேரக் கடப்புகள் சொல்லி முடியாது! நேரம் கடந்து வந்ததால், கள்ளமார்க்கட்டுக்காரர்களும் தப்பிவிட்டனர், தங்களிடமுள்ளவற்றை தக்க விலையில் விற்றதின் மூலம்!

குறைந்த விலைக்குத் தருவதாகக் கூறியபொழுது மறுத்தனர்—அதிக விலை கொடுத்து பிறகு அவர்களை வாங்கினர்! இதனால் ஏற்பட்ட நஷ்டம் 133 இலட்சம்! இந்த பணம் 'சும்மா' வந்துவிடவில்லை. இந்த நாட்டவரின் வியர்வையிலே, குருதியிலே வெந்த வெள்ளிப் பணங்கள். அதனைத் தான் இவர்கள் அள்ளி இறைக்கிறார்கள்.

இதுபற்றி விசாரிக்க ஒரு கமிட்டி வேண்டுமென்றார் தோழர் தியாகி அவரும் காங்கிரஸ் வாதிதான்! மறுத்துவிட்டனர். எதிர்பார்த்தது தான். எனவே ஆச்சர்யமில்லை, இது

ஆனால் இதனை அவர் சொல்லும்பொழுது அந்தச் சபை ஆச்சர்யப்பட்டதாம். மந்திரிமார்கள் திடுக்கிட்டனராம்! தங்களால் நடத்தப்படும் ஆட்சியிலே நடப்பதைக்கூட அறியாத இவர்கள் கையில் இந்த நாடு அகப்பட்டுக் கொண்டதே-அது எப்படி என்று உலகு ஆச்சர்யப்படுகிறது-நாம் அவதிப்படுகிறோம்!

133 - இலட்சம், நாட்டிற்கு ஏற்பட்ட நஷ்டம் என்று மட்டுமல்ல, நாடாளத் தெரியாதவர்கள் கையிலே இந்த நாடு சிக்கிவிட்ட அசம்பாவிதத்தைத் தெரிவிக்கும் அறிகுறி-அது மட்டுமல்ல, நாமும் அதில் இருக்கிறோம் என்று அறிவிக்கும் அவமானச் சின்னம்! அபாய அறிவிப்பு!!

—✱—

## அன்பழைப்பு

செங்கற்பட்டு மாவட்டக் கழகச சார்பில், நமது நண்பர்கள் 9—12—50 அன்று வாலாஜாபாத் ராஜா தியேட்டரில் 'வேதனைக் குரல்' என்ற இயக்க நாடகம் ஒன்றை நடத்தவிருக்கின்றனர்.

நாடகம் நண்பர் மு. கருணாநிதி அவர்கள் தீட்டியதாகும். அதோடு, அவரும் முக்கிய பாத்திரமேற்று, கலந்து கொள்ளுகிறார்.

மேற்படி நாடகத்தில் பங்கு கொள்ளும் ஏனைய நண்பர்கள் யாவரும்—இயக்கத்தின் முன்னணி வீரர்கள்.

அவர்களது முயற்சி — ஒரு நல்ல காரியத்திற்காகும்.

சிந்தனைக் கருத்துக்கள் செறிந்த, இச்சீர்திருத்த நாடகம்—நாம் காணப்போவது, ஒரு நல்வாய்ப்பு.

ஆகவே, சந்தர்ப்பத்தை இழக்கவேண்டாமென என் நண்பர்களுக்குத் தெரிவித்து, எல்லோருக்கும் அன்பழைப்பு விடுக்கிறேன்

காஞ்சிபுரம்,
1-12-50

**அண்ணாதுரை**

### ஆர்க்காட்டில்
## அண்ணாதுரை
### மாபெரும் பொதுக்கூட்டம்

ஆர்க்காடு: 21—10—50 அன்று திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் காஞ்சி தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்துக்கு முன் கூட்டத்திற்கு வந்திருந்த பொதுச் செயலாளர் அண்ணாதுரை, அலங்கரிக்கப்பட்ட காரில் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார் பிறகு பாலாற்றில் போடப்பட்டிருந்த அழகான மேடையில் கூட்டம் துவங்கியது.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை முன்னுரைக்குப்பின் தோழர் ஈ. வி. கே. சம்பத் நாட்டுநிலை குறித்தும் ஆளவந்தார் போக்கு பற்றியும் வீர முழக்க மிட்டார். பிறகு பொதுச் செயலாளர் அண்ணா, நீண்டநேரம், நமது கழக நடவடிக்கைகள் குறித்து சொற்பொழி வாற்றினர்.

ஆர்க்காடு இதுபோன்ற பொதுக் கூட்டத்தை எப்போதுமே கண்டதில்லை அவ்வளவு பிரமாத மாக இருந்தது.

தோழர் பொன்னம்பலம் நன்றி கூறலோடு பெருமிதமான மேற்படி பொதுக் கூட்டம் முடிவுற்றது.

(நிருபர்)

## அறிக்கை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பின்பற்றித் திராவிடப் பெண்கள் நன்மைக்கு உழைக்கும் நோக்கத்துடன் திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம் ஒன்று அமைக்க இயக்கப்பிரமுகர்களுடனும் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களுடனும் பெண்கள் இயக்கப் பிரமுகர்களுடனும் கலந்தாலோசித்து ஏற்பாடு செய்துவருகிறோம். இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். தொடக்க விழாவுக்கான அமைப்புக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் தொடக்கவிழா நடைபெற விருப்பதால், இயக்கத்தில் கலந்து தொண்டாற்ற விரும்பும் திராவிடப் பெண்கள் மேற்குறிப்பிட்ட முகவரியிலிருந்து நேரிடையாகவோ ஆள்மூலமாகவோ ஆண்டுக் கட்டணமாயெ நான்கணாச் செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளும்படி வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

அலமேலு
அமைப்பாளர் தி. மு. கழகம்
தமிழ்மணி
13, அருணாசல ஆச்சாரி தெரு
சேம்பாக்கம், திருவல்லிக்கேணி

**நாஞ்சில் மாவட்ட மாநாடு டிசம்பர் 29, 30 தேதிகளில்**
**தலைவர்: இரே, இளம்வழுதி எம்.ஏ., பி.எல். துவக்குபவர்: என். எஸ். இளங்கோ**

# பூத்திடும் புதுக் கழகங்கள்

வீரப்பன் சத்திரம் (ஈரோடு) சத்தியமங்கலம் ரோட், 18-ம் எண் இல்லத்தில் கூடி, 13—8—50ல் தி. மு. க. கிளை அமைக்கப்பட்டது. செயலாளர்:- ஆர். தேவராஜ், துணைச்செயலாளர்:- ஏ. இராமசாமி, பொருள் உறுப்பினர்:- ஆர். முத்து மற்றும் பத்து செயற்குழு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வடசேரியில் 15—8—50ல் நாகர்கோவில் தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் என். குற்றாலலிங்கம் தலைமையில் கூடி, தி. மு. க. கிளை நிறுவப்பட்டது செயலாளர்:-வி. சுப்பிரமணியன், துணைச்செயலாளர்:— என். எஸ். வேலாயுதம், விளம்பர உறுப்பினர்:- எஸ். சுப்பிரமணியன், பொருளாளர்:- பி. இராமச்சந்திரன் மற்றும் பதினொருபேர் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது

மணலூரில் (சங்கரன்கோவில்வட்டம்) 9—9—50ல் தோழர் குருசாமி தலைமையில் நடந்த அமைப்புக்கூட்டத்தில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயலாளர்:- வி. சுப்பிரமணியன், துணைச்செயலாளர்:- இ.வெ.ஆ. லட்சுமணன், பொருள் உறுப்பினர் வேலாயுதம், விளம்பர உறுப்பினர்:- சாமு அண்ணு, மற்றைய செயற்குழுவினர்:- கருப்பையா, இராமகிருட்டினன், சுப்பையா, செல்லையா, இ.வெ. அ. சொக்கலிங்கம், சப்பாணிமுத்து சி. கிருஷ்ணன், ஆ. சண்முகம், க. கிருஷ்ணன் ஆகியோர்.

இடையப்பட்டியில் 14—9—50 தோழர் வெங்கடாசலம் தலைமையில் கூடிய அமைப்புக்கூட்டத்தில் தி.மு.க. கிளை தோற்றுவிக்கப்பட்டது. செயலாளர்:- ஏ. காசிலிங்கம், துணைச்செயலாளர்:- கே. தமிழ்மணி பொருள் உறுப்பினர்:- எஸ். துரைசாமி, விளம்பர உறுப்பினர்:- இ. இராசகோபாலன், நிர்வாக உறுப்பினர்கள்: எல். பாலு, ஆர்- கோபால்வாதன், எஸ். வெங்கடாசலம், வி.ஏ. ஜெனுதீன், என். நாராயணசாமி, அருணாசலம், ஆறுமுகம்.

இலங்கையில் 17—9—50-ல் தெலிஅறை மருத்துவ விடுதி லயனில் தோழர் கு. க. பிச்சையா, இல்லத்தில் தோழர் சா. பால் தலைமையில் நடந்த கூட்டத்தில் தி. மு. க. கிளை திறந்துவைக்கப்பட்டது. தோழர்கள் கு. சு. பிச்சையா, துரைசாமி, பேசினர். தோழர் அழகிறைவன், பொதுச் செயலாளர்:— சி. என். ஏ. வின் படத்தைத்திறந்து வைத்தார். செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- கே. பிச்சையா, துணைச்செயலாளர்- பி.எஸ். துரைசாமி, பொருள் உறுப்பினர்:- அழகிரிநாதன், தலைவராக இருந்து தோழர் சா. பால் காரியமாற்றுவார். மற்றும் 15பேர் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேட்டுப்பாளையத்தில் (கோவை மாவட்டம்) 17—9—50ல் தோழர் எஸ். எம். கிட்டு தலைமையில் கூடிய அமைப்புக்கூட்டத்தில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயலாளர்:- ப. கிருட்டிணசாமி, பொருள் உறுப்பினர்:- ஆ. நாராயணன், விளம்பர உறுப்பினர்கள்- மு. இராமச்சந்திரன், பெ. இராமசாமி.

சித்தையன் கோட்டையில் 18—9—50ல் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயலாளர்:- என். பி. நாச்சியப்பன், துணைச் செயலாளர்:- கே முத்து, விளம்பர உறுப்பினர்:- எஸ். வெங்கடாசலம்.

நெமலி (வடார்க்காடு மாவட்டம்) 21—9—50-ல் தோழர் எஸ். டி. வரதராசன், தலைமையில் கூடியகூட்டத்தில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது திருமால்பூர் தோழர்கள் ஆடிபாதம், பரசுராமன், குமாரசாமி, லோகநாதன், பேசினர். பிறகுசெயற்குழு தேர்தல் நடந்தது. செயலாளர்:- எஸ். டி. வரதராசன், விளம்பர உறுப்பினர்:- எஸ். கே. எஸ். அருணாசலம், பொருள் உறுப்பினர் ம. தி. சுப்பிரமணியம் மற்றும் 11 பேர்கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

போடம்பட்டியில் 25—9—50ல் தி-மு-க-கிளை நிறுவப்பட்டது. பொதுச் செயலாளர்-தங்கேசு, துணைச்செயலாளர்:- தங்கராசு, பொருள் உறுப்பினர்:- முத்துரத்தினம், கழகத்தின் சார்பில் வாசக மன்றம் ஒன்று ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அத்திப்பாளையத்தில் 24-9-50ல் தி-மு-க- கிளை நிறுவப்பட்டது. பொதுச் செயலாளர்:— பார்த்தசாரதி, துணைச் செயலாளர்கள்- சகந்நாதன், இராமச்சந்திரன், பிரசாரக்குழு-நிலா, வெங்கடசாமி, இராசு தலைமையில் கூடிய பொதுக் கூட்டத்தில் தி மு. க. கிளை நிறுவி செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- மு. இராமஇராசு, துணைச் செயலாளர்:- மு. பொன்னம்பலம், பொருளாளர்:- நா. சி. இராமர், விளம்பர உறுப்பினர்:- அ. பொன்ராம். மற்றைய செயற்குழுவினர்:- சி. சினிச்சாமி, ச. சின்னபொம்மையா, தா பொம்மையா, வீரமல்லையா, சுருளி, மாவட்ட பிரதிநிதி நா. சி. இராமர் இறுதியாக கலையழகன் பேசினர்.

பஞ்சநதிக்குளத்தில் 10-10-50ல் தி மு. க கிளை நிறுவப்பட்டது. செயலாளர்:- கோ. முருகையன், துணைச் செயலாளர்:- த. பண்டரிநாதன், பொருள் உறுப்பினர்:- சே. சதாசிவன், பிரச்சாரக் குழு செயலாளர்:- சொ. இளந்துரை.

போடிநாயக்கனூரில் 14-10-50ல் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது, செயலாளர்:- தா. தங்கராசன், குழவி, தேவராசன், சட்டக்குழு:— அ. நா. இராமச்சந்திரன், இராசசேகரன், அமைப்புக்குழு - அரங்கநாதன், தாமோதரசாமி, மேலாளர்கள்- க. பாலகிருட்டிணன், தாமோதரசாமி, பொருள் உறுப்பினர்:— கண்ணப்பனர்.

ஆனைமலையன் பட்டியில் 27—9—50ல் தோழர் நாகையசாமி தலைமையில கூடி, தி. மு. க. கிளை நிறுவினர். செயலாளர்:- ச. படோசன், துணைச் செயலாளர்:- கு. ஆசீர்வாதம், பொருள் உறுப்பினர்:- நல்லுசாமு. விளம்பர உறுப்பினர்:- தே. நல்லதம்பி மற்றைய செயற்குழுவினர்:- சங்கர்லால், காந்தி, இராஜாராம், நாகையசாமி, க. சித்தன், மு. முகமது முகையதீன் கடைசியாக, கலையழகன் பேசினர்.

பூசாரி கவுண்டன் பட்டியில் 27—9—50ல் தோழர் மு. இராம துணைச்செயலாளர்:- கா. மாமுண்டி, பொருள் உறுப்பினர்:- மா. பெரியசாமி, விளம்பர உறுப்பினர்:- மீ. செல்லமுத்து மற்றைய செயற்குழுவினர்:- அ. காமராசன், கே. பி. சிவம், நீ. முத்து, மு. ஆறுமுகம், சிங்காரவேலு, க. அழகர்சாமி, தர்மராசன்

மாவீடு மண்ணை

13-10-50ல் தி. மு க. அமைக்கப்பட்டது. செயலாளர்:- ஏ. நாராயணன், துணைச்செயலாளர்:- இராமச்சந்திரன், பொருள் உறுப்பினர்:- பாண்டியன், விளம்பர உறுப்பினர்:- கே. தங்கத்துரை.

கோவை, மேற்கு வட்டாரத்தில் 14-10-50ல தோழர் சி. டி. தண்டபாணி தலைமையில் நடந்த அமைப்புக்கூட்டத்தில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. மூன்று வார்டுகளைச் சேர்த்து கோவை மேற்கு வட்டார தி. மு. க. என்று பெயரிட்டனர். செயலாளர்:- சி. என். ஆறுமுகம், துணைச் செயலாளர்:- சி. என். கிருட்டிணசாமி, பொருள் உறுப்பினர்:- எஸ் டி. சிதம்பரம், விளம்பர உறுப்பினர்:- நாகலிங்கம் மேலும் 7-பேர் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாரண்டபள்ளி

16—10—50ல் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயலாளர்:- எம். எஸ். பசுவராசு, துணைச்செயலாளர் எம். வி. நாராயணசாமி, பொருளாளர்:- எம். எஸ். ஜே. இராமன், விளம்பர உறுப்பினர்:- என் ஏ. பாஷா, மாவட்ட பிரதிநிதி:- கரிவேங்கடன் மற்ற செயற்குழுவினர்:- எம். எஸ். அங்கமுத்து, எம். ஆர். குட்டிசாமி, எம். வி. வெற்றிவேல், எம். ஏ. அரங்கசாமி, வி. கோவிந்தன், எம். வி. நாதம், கந்சுண்டப்பா, ஆர். கோவிந்தன் எம். என். தேவேந்திரன் பேசினர்கள்.

### நெமலியில் துவக்கவிழா

27—10—50 வெள்ளி மாலை 6-மணிக்கு தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் காஞ்சி, கலியாணசுந்தரம் தோழர் இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்கள், திராவிட முன்னேற்றக்கழகக் கொள்கை திட்டங்களைப் பற்றி உணர்ச்சி ததும்ப பேசிய பின்னர், குன்றத்தூரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து தோழர் வாதன் ஒரு கண்டனதீர்மானம் நிறைவேற்றிய பிறகு கூட்டம் இனிது முடிந்தது.

இராசப்பய்யன் சாவடியில் 1—11—50ல், தோழர் தமிழ்முகில் தலைமையில் நடந்த கூட்டத்தில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- பி. எஸ். பி. சாமி, துணைச் செயலாளர்:- சி. எஸ். வேலன், பொருள் உறுப்பினர்:- தமிழ்முகில், விளம்பர உறுப்பினர்கள்:- கோ. இராமதாஸ் டி. வி. கோபால் மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாகக்குழு தெரிந்தெடுக்கப்பட்டது.

இரணியலில்: 3-11-50ல நடந்த அங்கத்தினர்கள் கூட்டத்தில் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயலாளர்:- பெ. ஆறுமுகம், துணைச் செயலாளர்:- தா. செல்லம் பொருள் உறுப்பினர்:— துரைராஜ், ஜான். விளம்பர உறுப்பினர்கள்:- பாபுசைகம், ராஜகோபால் இன்னும் பதின்மர் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### அறிவு வளர்ச்சிக் கழகம்
### தி. மு. க. கிளை
### சின்ன காஞ்சிபுரம்.

12—11—50 மாலை 6 மணியளவில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில், 'திராவிட நாடு' நிலையத்தில் கூடிய தி மு. க. ஆதரவாளர் கூட்டத்தில் கீழ்க்கண்ட செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. பொதுச் செயலாளர்:— ஏ. சுந்தரம், துணைச் செயலாளர்:- கே. ஆர். இராசகோபால், பொருள் உறுப்பினர்:- சி. இராசரத்தினம், விளம்பர உறுப்பினர்கள்:- எம். என். வேதகிரி, சி. எஸ். சுந்தரேசன், மற்றைய செயற்குழுவினர்:- இராசாபாதர், கே. தெய்வநாயகம், ஜி. வேணு, மாணிக்கம், வெங்கடேசன், பு. சண்முகம், சி. வி. இராசகோபால், அப்பாசாமி, ஈழத்தடிகள்.

கழக துவக்க விழாவை டிசம்பர் திங்கள் கடைசி வாரத்தில் நடத்துவதென தீர்மானித்து, மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, சி. இராசரத்தினம், வெ. சம்பந்தன், இராசாபாதர் பேசினர். தோழர் தில்லை—வில்லாளன் உடனிருந்து அமைப்புக் கூட்டத்தை நடத்தினர். தோழர் சுந்தரம் நன்றி கூறினர்.

# ஆட்சியாளரின் 'நாடறிந்த பொய்!'

## 'நேர்மையான விசாரணை நடத்துமா?'

### சர்க்கார் அறிக்கை—ஆசைத்தம்பி மறுப்பு

சேலம் நவம்பர்-25.

சென்னை சர்க்கார் விளம்பர இலாகா டைரெக்டரின் 22-ந் தேதி அறிக்கையைக்கண்டு விருதுநகர் தோழர் ஏ. வி பி. ஆசைத்தம்பி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையாவது,

"சிறைச்சாலை அதிகாரிகள் என்தலையை மொட்டையடிக்கவில்லை என்றும், என் தலைமயிர் விஷயத்தில் சிறை அதிகாரிகள் எவ்விதத்திலும் தலையிடவில்லை என்றும், சென்னை சர்க்கார் விளம்பர இலாகா ஒரு அறிக்கை வெளியிட்டிருந்ததை பார்த்ததும் ஜெர்மன் தேசத்து கோயபல்ஸ் நினைவு தான் எனக்கு வந்தது.

திருச்சி மத்திய சிறை அதிகாரிகளால் 'குவாரன்டைன்' பகுதியில் மனித உணர்ச்சியோடு எவ்வளவோ தயவாக கேட்டும் பயனின்றி, மிருகத் தன்மையிலே என்னுடைய, என் நண்பர்களான கலியப்பெருமாள், தங்கவேல் ஆகியவர்களுடைய 'தலைமயிர்' 22—7—50ல் பறிக்கப்பட்ட பின்பு, எங்கள் சாதாரண தலைமயிரை தங்கம் வெள்ளி என்ற கருத்தில், கவலையோடு சிறை அதிகாரிகளை விசாரித்து 22—11—50ல் சென்னை சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருப்பதற்கு நாங்கள் நன்றி பாராட்ட கடமைப்பட்டவர்கள் என்றாலும், சென்னை சர்க்காரின் போக்கை கண்டிக்காமல் இருக்கமுடியாது. எங்களை மொட்டையடிக்கவில்லை யென்று கூறுகிற சர்க்கார் நாளை, ஆசைத்தம்பி என்ற நபர் சிறையிலேயே இருக்கவில்லை என்று அறிக்கைவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் என்னையும், என் நண்பர்களையும் மொட்டையடித்த சிறை அதிகாரிகள் இன்னும் அங்குதான் இருக்கிறார்கள் எங்களை மொட்டை அடிக்கும்போது பலதோழர்கள் (கைதிகள்) எங்களோடு இருந்தார்கள். சர்க்கார் நேர்மையானவிசாரணை நடத்தத்தயாராயிருந்தால், நாங்கள் திருச்சி சிறையில் மொட்டையடிக்கப்பட்டோம் என்பதை நிரூபிக்கிறோம். எனவே சென்னை சர்க்கார் தங்கள் அறிக்கையில் உள்ள தவறை உடனே திருத்திக் கொள்ளுமென்று நம்புகிறேன்."

# ★ கழகச் செய்திகள் ★

### மங்கநல்லூர்

30—9—50ல் நடந்த புது செயற்குழு தேர்தல் கூட்டதில் கீழ்க்கண்டவர்கள் இவ்வாண்டு நிர்வாகக் குழுவினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- இரா. முத்துகுமாரசாமி, துணைச்செயலாளர்:— மா. சொக்கலிங்கன், பொருள் உறுப்பினர்:- இரா. கோபாலகிருட்டிணன், விளம்பர உறுப்பினர்:- ப. சுந்தரமூர்த்தி. மேலும் எட்டுபேர் கொண்ட நிர்வாககுழு தெரிந்தெடுக்கப்பட்டது.

### அய்யம்பாளையம்

14-10-50ல் தோழர் சேட் அச்மல்கான் தலைமையில் நடந்த தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் ஓராண்டுவரவு செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டது. புதிய செயற்குழுவினர் விவரம்— செயலாளர்:- மு. பால்சாமி உதவிச் செயலாளர்:- மு, ரா, முத்துசாமி, விளம்பர உறுப்பினர்:- ப. செல்லையா, உதவி:- வி. ராசாமணி, பொருளாளர்:- கொ, அழகர்சாமி. மறைந்த தமிழ்க்கடல் மறைமலையடிகள், சேலங் கல்லூரித் தலைவர் இராமசாமி, ஆகியோர் மறைவிற்கு வருந்தியும், ஆட்சியாளரின் ஆணவப் போக்கைக் கண்டித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பதவியிலிருந்து விலகும் தோழர்கள் இருளப்பன், அச்மல்கான் ஆகியோருக்கு விருந்து தோழர் செல்லையா வீட்டில் நடந்தது.

### கடப்பூர்

15—10—50-ல் காலை தோழர் செல்லையா தலைமையில் ஊர்வலம் நடந்தது. மாலையில் தோழர் வை. மு. மாரியப்பா தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தோழர் பொன்னுச்சாமி நாட்டுப் பண்பாடினார். தோழர்கள் எஸ். கலிங்கன், விருதை ந. இராமசாமி, கோவில்பட்டி நகர மன்றத்தலைவர் ஈ, வெ. அ. வள்ளிமுத்து ஆகியோரும், பார்ப்பன நண்பர் எட்டயபுரம் ச. பிச்சையும் பேசினர்.

### மேட்டுப் பாளையம்

15—10—50-ல் தோழர் இரா. செகந்நாதன் தலைமையில் நடந்த தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் தோழர் தி. கோ. சீனுவாசன் வந்த பொதுக்கூட்ட வரவு செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டது சேலங்கல்லூரித்தலைவர் இராமசாமி, தமிழ்க்கடல் மறைமலையடிகள் மறைவிற்கு வருந்தியும், அண்ணு, பெரியாரை வெளியில் விட்டுவிட்ட ஆட்சியாளரைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### குடந்தை

15—10—50-ல் தோழர் கே-கே-நீலமேகம் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். கே. சாமி, ஈ. வெ. கி. சம்பத் பேசினர்.

### அரகண்ட நல்லூர்

15—10—50-ல் தோழர் குமார தனிகாசம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் விருத்தாசலம் தோழர் சி, முனுசாமி பேசினர்.

### கோவத்தூர்

15—10—50ல் தோழர் கே. பி. நரசிம்மன் தலைமையில் நடந்த தி. மு.க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈரோடு எஸ். அப்பாவு, என். வி. நடராசன் பேசினர்.

### விக்கிரமங்கலம்

15—10—50 உள்ளூர் பிரமுகர் தோழர் பி. கண்ணுச்சாமி தலைமையில் நடந்த தி. மு.க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. சாமியப்பா வி. குருசாமி, ஆர். கே. கந்தசாமி, எஸ். முருகையா பேசினர்.

### முசுவூர்

16—10—50-ல் தோழர் பி. அழகப்பன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் மணிகண்டன் திராவிடப் பண் பாடினார். தோழர்கள் க. நவநீதக்கிருஷ்ணன், மு.பாலகுரு, மணிகண்டன் பேசினர்.

### இலுப்பையூரணி

16—10—50ல் தோழர் எஸ். முத்தையா தலைமையில் நடந்த புத்தாண்டு நிர்வாக்குழு தேர்தல் கூட்டத்தில் செயலாளர்:- அந்திரேயா, விளம்பர உறுப்பினர்:- வி. எஸ். முத்தையா, பொருள் உறுப்பினர்கள்:- ஆ. காணிக்கம், ச. பொன்னையா, ம. ச. தங்கவேலர். சென்ற ஆண்டு வரவு செலவு கணக்கை எம். ஆர் ஆர்தர்பில்லியம் படித்துக் காண்பித்தார்.

### சலகண்டபுரம்

19—10—50ல் தோழர் ப. கண்ணன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், தோழர்கள் அ. தமிழரசு, அ. இராமசாமி பேசினர்.

### நாகர்கோவில்

20—10—50ல் தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த தி. மு. க. மாவட்ட அமைப்புக் கூட்டத்தில் தோழர் வி. எம். ஜான் பேசினார். மாவட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று இரவு 8-மணிக்கு தோழர் மனோகரன் தலைமையில் நாஞ்சில் மாவட்ட மாநாட்டுக்கு வரவேற்புக் குழு கூட்டம் நடந்தது.

### பலராமபுரம்

22—10—50ல் தி. மு க. முதலாண்டு விழா, தோழர் வை. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. தோழர் அருணாசலம் வரவேற்புரை வழங்கினார். தோழர்கள் வன்னியப் பெருமாள், மனோகரன் பேசினர்.

### திருவல்லிக்கேணி (சென்னை)

22—10—50ல் நடந்த கூட்டத்தில் இவ்வாண்டுக்குரிய செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- வேலப்பன், துணைச்செயலாளர்:- விக்கிரமசிப்பன், பொருள் உறுப்பினர்:- நீல. நாராயணன், விளம்பர உறுப்பினர்:- விசுவம் கோபால், மேலும் பதினொருவர் அடங்கிய நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப்பட்டனர்.

19-10-50ல் காலை 9½-மணிக்கு தோழர் சா. சின்னஅப்பன் தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் விடுதலையடைந்த பொதுச் செயலாளரைப் பாராட்டி தோழர்கள் ஆ. மாணிக்கம், வெ. ச. முத்தையா, ஆ. ஜான்சாமுவேல், எம். ஆர். ஆர்தர் வில்லியம் பேசினர்.

### பெரியார்பேட்டை

25—10—50ல் தோழர் மணியம் தலைமையில் தி. மு. கழக உறுப்பினர் பொதுக்கூட்டம் நடந்தது. பெங்களூர் நகரத்தில் இயக்கக் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

### திருக்காரவாசல்

26—10—50ல் தோழர் மருதப்பன் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் இவ்வாண்டுக்குரிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- ஏ. சிங்காரவேல், துணைச்செயலாளர்:- ஜி. வெங்கடராமன், பொருள் உறுப்பினர்:- வி. இராசமாணிக்கம், விளம்பர உறுப்பினர்:-- ஆர். இராமச்சந்திரன் மேலும் பத்துபேர்கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

### காரைக்குடி

29—10—50ல் தோழர் கவிஞர் கண்ணதாசன் தலைமையில் நடந்த தி. மு. க, பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., மு. கருணாநிதி, டி. கே. சீனுவாசன் ஆகியோர் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர். குன்றத்தூர் கொடுமை, சென்னை அக்கிரமம் ஆகியவைகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தஞ்சை மாவட்டத் தோழர்கட்கு

"நமது கழகப் பிரச்சாரக் குழுத் தோழர்களின் சுற்றுப் பயணம் நடத்தவேண்டுமென தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் நமது தலைமை நிலயத்துக்கு கடிதங்கள் வந்துகொண்டுள்ளன. அதையொட்டி தோழர்கள் மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ ஆகியோர் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்யுமாறு, பிரச்சாரக் குழுவின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். ஜனவரி 15-ந் தேதி முதல் அவர்களது பிரச்சாரப் பயணம் துவங்கும். ஆகவே, கூட்டங்கள் நடத்த விரும்பும் கிளைக் கழகங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, தேதி நிர்ணயம் செய்து கொள்ளலாம்." என, சென்னை: திராவிட முன்னேற்றக் கழக தலைமை நிலயத்திலிருந்து பிரச்சாரக் குழு செயலாளர் சார்பில், தஞ்சை மாவட்டத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. கடிதம் எழுதும் முகவரி:- என். எஸ். இளங்கோ தி. மு. கழகம், அதிராம்பட்டினம்.

### சிதம்பரம்

30—10—50ல் அவ் ஊர் மைதானத்தில் தோழர் தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன் பேசினர். முத்தமிழன் நன்றி கூறினார்.

### நல்லிக்குப்பம்

30—10—50ல் தோழர் பி. பொன்னுசாமி தலைமையில் தி மு க. செயற்குழுக் கூட்டம் நடந்தது. சென்னை குன்றத்தூர் அடக்குமுறைப்போக்கைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகு மாவட்டப் பிரதிநிதிகளாக தோழர்கள் ச. இராசகோபால், பி-பொன்னுசாமி தெரிந்தெடுக்கப்பட்டனர்.

### பரங்கிப்பேட்டை

30—10—50ல் தோழர் ப-மா-இரத்தினவேல் தலைமையில் தி-மு-க தொடக்கவிழா நடந்தது. தோழர்கள், இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. கே.ஏ. மதியழகன, பி. ஏ, பேசினர். கூட்டத்தில் செயற்குழுவினரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன செயலாளர்:- த. சம்பந்தமூர்த்தி, உதவிச்செயலாளர்கள்- மு-இராமசாமி இரா-ஆறுமுகம், பொருள் உறுப்பினர்:- சி-சுந்தரமூர்த்தி, விளம்பர உறுப்பினர்:- கோ. இராமச்சந்திரன். செயற்குழுவினர்: - வி, நாராயணசாமி, சா-வி-சாமி, அ-அப்துல்கபூர்

### திலக்கோட்டை

12—11—50ல் தோழர் பஞ்ச தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் தோழர்கள் ராஜாராம், ச நடராசன் பேசினர். மதுரைக்கு வருவதாக இருந்த நேருதாப்புக்கு கருப்புக்கொடி காட்டச்செல்வதெனவும், கிராம பிரசாரக் கமிட்டி பொன்று நிறுவுவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அழங்காநல்லூர்

13—11-50ல் தோழர் சின்னையா தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் நிர்வாகக்குழுவினர் அறிவிக்கப்பட்டனர். செயலாளர்:- கெ-சுட்டகெங்கை துணைச் செயலாளர்- ல-சின்னையா, பொருள் உறுப்பினர்- வே. பழனிபாண்டி, விளம்பர உறுப்பினர்கள்:- அ-வேணுகோபால், மு. பழனி, பிற செயற்குழுவினர்:- வி. எம். விஜயழகன், செ. பிச்சை, ஏ-என். மொழிச் செல்வன், அ. தனிக்கோடி, ரா. தனிக்கோடி.

### ஆர்க்காடு

ஆர்க்காட்டு தி-மு-க-இவ்வாண்டு செயற்குழுவினர் விவரம்:- செயலாளர்:- த. பொன்னம்பலம், உதவிச் செயலாளர்:- ஞானவேலன், பொருள் உறுப்பினர்:- ஆர். மணிவண்ணன், விளம்பர உறுப்பினர்: ஜி. நாராயணசாமி, முனிகண்ணு. மற்றையசெயற்குழுவினர்:- ஆர்-நடராசன், ஆதிகேசவன், பி-சாமராசன், கிருட்டிணன்,

### கண்ணமங்கலம்

4—11—50ல், நடைபெற்ற திறப்பு விழாவில் தோழர்கள் வி. ஏ. பருல், போளூர் சுப்பிரமணியம், இளஞ்செழியன், கருத்தோவியன் பேசினர்.

### காட்டுப்பாடி

5-11-50ல் தோழர் வி. டி. அண்ணாமலை தலைமையில் தி. மு. க. கிளை திறப்பு விழா நடந்தது. தோழர் போளூர் சுப்பிரமணியம் கொடி யேற்றினர். தோழர்கள் வாணியம்பாடி தத்தப்பன், போளூர் சுப்பிரமணியம், காஞ்சி, கல்யாணசுந்தரம் பேசினர். தோழர் வி. ஏ. பருல் நன்றி கூறினர்.

—✱—

## தங்கப்பழம் - சிவசாமி வழக்கு

### சாட்சிகள் குறுக்கு விசாரணை

தூத்துக்குடித் தோழர்களான எம். எஸ். சிவசாமி, தங்கப்பழம் ஆகியோர்மீது "சவுக்கடி" என்று நூல் தீட்டி வெளியிட்டமைக்காகத் தொடரப்பட்டிருக்கும் வழக்கு 14-11-50, 24-11-50 ஆகிய இரு வாய்தாக்களிலும் விசாரணை செய்யப்பட்டு 1—12—50க்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி வாய்தாக்களின்போது சர்க்கார் தரப்பு சாட்சிகளாக டிப்டி தாசில்தார், கலெக்டர் அலுவலக குமாஸ்தா, வித்தோ பிரஸ் மானேஜர், குமாஸ்தா, அச்சுக்கோர்ப்பவர்கள், அமிர்தாபிரஸ் உரிமையாளர் முதலியோர் விசாரிக்கப்பட்டனர். தங்கப்பழம், சிவசாமி ஆகிய நமது கழகத்தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் சோமய்யாவும்; அச்சகத்தார் சார்பாக பெரும்புடையானும் குறுக்கு விசாரணை செய்தனர்.

"சவுக்கடி" வழக்கு முதலில் ஆட்சியாளரால் தள்ளப்பட்டதும், பிறகு அது (Clerikal mistake) ஆகவே விடமாட்டோம். மீண்டும் வழக்குத் தொடருவோம்" என்று 'புதைத்த பிணத்தைத் தோண்டி எடுத்ததும்' ஆன, விபரங்களைத் தோழர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

✱

# காஞ்சி செங்கற்பட்டு மாவட்ட
# யில் தி. மு. க. முதல் மாநாடு

**23-12-50, 24-12-50 தேதிகளில்**

அரங்கசாமி பந்தலில்

தலைவர். **சி. பி. சிற்றரசு**

துவக்குபவர். **ஏ. கே. பி. ஆசைத்தம்பி**

பொதுச்செயலாளர் சி. என். ஏ., மற்றும் இயக்க வீரர்கள்
எல்லாம் பங்கு கொள்வர்

தெருக்கடியான நேரத்தில் கூடுகிறோம்! 'குன்றத்தூர்' நடந்த
மாவட்டத்தில் கூடுகிறோம்!

**பொதுமக்களே! இயக்க வீரர்களே! எல்லோரும் வாரீர் காஞ்சிக்கு!**

இசை நிகழ்ச்சி
திருச்சி: எம். எம். மாரியப்பா
திருவாரூர்: டி. வி. நமசிவாயம்
நாகூர்: எம். அனீபா
சென்னை: கே. ஆர். செல்லமுத்து

நாடகங்கள்
கே. ஆர். இராமசாமி.
சி. என். அண்ணாதுரை
பங்குகொள்ளும்
"சந்திரமோகன்"
"நீதிதேவன் மயக்கம்"

| செயலாளர்கள், | தொண்டர் படைத்தலைவர்கள், | வரவேற்புக்குழுத் தலைவர் |
|---|---|---|
| சே. கோ. பெருமாள், | சி. பஞ்சாட்சரம். | சி. வ. எம். அண்ணாமலை. |
| டி. சபாபதி. | கே. டி. எஸ். மணி. | |

விளம்பர உறுப்பினர்கள்,
ஆர். கே. மூர்த்தி, இ. சத்துராசு.

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டவர்களுமாகக் காணப்பட்டனர்.

பிறகு, பெரம்பலூரில் அனைவரும் சப் மாஜிஸ்டிரேட் முன் ஆஜர் செய்யப்பட்டார்கள். கோர்ட்டில் உள்ளூர் வெளியூர் கழக முன்னணி வீரர்கள் பெருவாரியாகக் கூடியிருந்தனர்.

பேச்சுரிமைப் போர் வீரர்களைக் கண்டதும் வெளியில் கூடியிருந்த மக்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று முழக்கமிட்டனர்.

பிறகு எழு பேரும் மத்தியான உணவுக்கு அனுப்பப்பட்டு ரிமாண்டுக்கு பெரம்பலூர் சப்-ஜெயிலுக்கு அனுப்பப்பட்டனர். சப-ஜெயில வாயிலில் தோழர் விஜயகோபாலன் தகப்பனார் திரு மூர்த்திவேல் உடையாரும் தாயார் துளசியம்மாள் அவர்களும் மகனைத் தட்டிக்கொடுத்து அண்ணா அவர்கள் வேண்டிய நாட்டின் விடுதலைக்கு வீட்டுக்கொரு பிள்ளை தேவை என்றதற்கு முதற் காணிக்கையாக அனுப்புகிறோம்' என்ற முறையில் அனுப்பினார்கள். அதுபோலவே சிறைப்பட்ட தோழர்களின் பெற்றோர்களும், உறவினர்களும், மற்றும் நண்பர்களும் இயக்க முக்கியஸ்தர்கள் தோழர் வரகுபாடி சி. முத்துவீரன், நாரணமங்கலம் தோழர்கள் கா. பெ. இராமசாமி, க. ராசு, விஜயகோபாலபுரம் தோழர்கள் வி. அ. சிவன், வி. மு. அப்பாவு, வி. மு. கிருட்டிணசாமி, பெ. பொன்னுசாமி, மு. ரெங்கசாமி, மு. கோவிந்தசாமி, சு. சாமிநாதன், அ. முத்துசாமி, நாரணமங்கலம் தோழர்கள், நா. மு. பச்சமுத்து, நா. சு. வெங்கடாசலம் மற்றும் உள்ளூர், வெளியூர், முக்கியஸ்தர்களும் உடனிருந்து அனுப்பிவைத்தார்கள். தோழர்கள் ஏழுபேரும் இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்ற முறையில் வீரஎழுச்சியோடு சிறை புகுந்தனர்.

பின் கூடியிருந்த இயக்கத்தோழர்களையும் மற்ற கிராமப்பெரியார்களையும் கலந்து கிராம நிலைமையையும், சுற்றுவட்டாரமக்கள் நிலைமையையும் பற்றி கலந்ததில் பெருவாரியான மக்களிடத்தில் இந்தசம்பவம்பெரும் பரபரப்பை உண்டாக்கியிருப்பதையும், இன்னும் பலதோழர்கள் தடையை மீறுவதற்குத் தயாராக இருப்பதையும் தெரிந்து விரைவில் அதற்கு ஆவன செய்வதாகக்கூறி எல்லோரும் அமைதியாகவும், கட்டுப்பாடாகவும், அண்ணா அவர்களிடமிருந்து அனுமதி வரும்வரையில் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். எப்படியும்எந்த விலை கொடுத்தாவது அந்த கிராமத்திலும், பெரம்பலூர் வட்டத்திலும் பேச்சுரிமையைக்காக்க மிகவும் ஆர்வத்தோடு தோழர்கள் இருப்பது பாராட்டத்தக்கது. பெரம்பலூர் பகுதியிலிருந்த திருச்சி தோழர் நாகசுந்தரம் அவர்களும் கோர்ட்டுக்கு வந்திருந்து தோழர்களை உற்சாகப்படுத்தியபின் அங்கிருந்து வெளியூருக்குச் சென்றார். பிறகு அங்கிருந்து புறப்பட்டு தோழர்கள் எ-பி- தர்மலிங்கமும், என். சாம்பசிவமும், திருச்சிவந்துசேர்ந்தார்கள். நிலைமை அமைதியாகவும் கட்டுப்பாடாகவும் ஒழுங்காகவும இருக்கிறது. மிகவும் பாராட்டத்தக்கது. (தனி நிருபர்)

❉

## மதுராந்தகத்தில்!

10-12-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு கடைவீதி காந்தி மண்டபத்தில் தோழர் செய்யூர் சுதர்சனம் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

சி. என் அண்ணாதுரை, எம். ஏ., கலந்துகொள்வார்.

தோழர்கள் தில்லை-வில்லாளன் பி- ஏ- (ஆனர்ஸ்), திண்டிவனம் அ- தங்கவேலு, சதுரை- அழகரசு பேசுவர்.

## மறைவு

உடையார்பாளையம் தோழர் வெங்கடாசலம் அவர்களின் சகோதரர் தோழர் இராசகோபால் 20-10-50ல் இயற்கை யெய்திய செய்தி கேட்டு வருந்துகின்றோம்.

## நடக்க இருப்பவை

—❂—

2—12—50ல் வையம்பட்டியில் தோழர் மணப்பாறை சா. சமுத்திர பாண்டியன் தலைமையில் தஞ்சை தோழர் ஏ- கே- வேலன் பேசுவார்- தோழர் மு- தங்கநாயகம் கொடியேற்றுவார்.

2—12—50ல் வாலாஜாபேட்டையில் தோழர்கள் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை எம்-ஏ-எல்-டி-என் வி நடராசன், ஆர்-நடராசன் பேசுவர்.

2—12—50ல் திருச்சியில் வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மாநாடு தோழர் கோவை ஜி- டி- நாயுடு அவர்கள் தலைமையில் நடைபெறும்.

3—12—50ல் திருச்சியில் வகுப்புவாரி உரிமை மாநாடு அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் தோழர் எம்- ரெத்தினசாமி எம் ஏ, தலைமையில் நடைபெறும்- தோழர் முன்னாள் அமைச்சர் முத்தையா மாநாட்டைத் திறந்து வைப்பார்.

பெரியார் ஈ- வெ- ரா-வும் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

3-12-50ல் சோழநகரில் தோழர் மரியதாஸ் பி ஏ (ஆனர்ஸ்) தலைமையில் தோழர்கள் பாலையூர் பி- எஸ்- இளங்கோ, ஆர்- தமிழரசன், ம- கண்ணன் பேசுவர்.

3—12—50ல் திருச்சி கருணாநிதி பார்க்கில் திருச்சி மாவட்ட உழவர்கள் மாநாடு, கிராமப் பஞ்சாயத்து மாநாடு ஆகியவைகளின் வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெறுமென தோழர்கள் ஏ- பி- தர்மலிங்கம், எஸ்- வி- லிங்கம் அறிவிக்கின்றனர்.

3—12—50ல் திண்டுக்கல்லில் தோழர் இல- வீரராசன் தலைமையில் தோழர்கள் ஈ- வே- கி- சம்பத், ஈரோடு எஸ்- அப்பாவு என்- முத்து பேசுவர்.

6—12—50ல் தேவபாண்டலத்தில் தோழர் ஈ- வே- கி- சம்பத் பேசுவார்.

8—12—50ல் அய்யம்பேட்டையில் தோழர் இராம- அரங்கண்ணல் தலைமையில் பொதுச் செயலாளர் சி-என்-அண்ணாதுரை, தில்லை- வில்லாளன் பி- ஏ- (ஆனர்ஸ்) பேசுவர்.

17-12-50திருச்செங்கோடு தி-மு-க- பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்து கொள்வார்.

**சி. என். அண்ணாதுரை தலைமையில்**
**3—12—50 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு**
கல்லுணர்ச்சி நாடக சபையாரின்

★ **"வருங்கால வீரன்"** ★

[கதை-வசனம்-பாடல் ஏ. வி. ரமணி]

நடிகர்கள்:— ஏ. வி. ரமணி, எம். நாகூர், தோழியர் எஸ். டி. வசந்தா, ஆர். ராஜம், பேபி.

**சென்னை வி. பி. ஹாலில் நடைபெறும்**

டிக்கட்:— ரூ. 3, 2, 1, (வரியுள்பட)

(A) M. S. M. முகையதீன், ஆர்கனைசர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram